பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 110

ஞாயிற்றுக்கிழமை
16 மார்ச் 2025

பங்குனி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## சுழற்சிமுறை நாடாளுமன்ற உறுப்புரிமை!

மு.கா.வியூகம்

கொழும்பு, மார்ச் 16
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியப் பட்டி 14

செப்ரெம்பர் மாத அமர்வில்

# இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் வாக்கெடுப்பு

வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 16**
**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின், செப்ரெம்பர் மாத அமர்வில் இலங்கைக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.** 15



## சாந்திபுரம் திருட்டு; மூவர் கைதாகினர்!

நகைகளும் மீட்பு

மன்னார், மார்ச் 16
மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாந்திபுரம் பகுதியில், கடந்த சிவராத்திரி தினத்தன்று இரவு திருடப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான 15

## சங்கிலி அறுப்பு; பெண் மறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 16
புனித கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் பெண்ணொருவரின் சங்கிலியை அறுத்த பிறிதொரு பெண், நீதிபதியின் உத்தரவுக்கு 14

## கச்சதீவில் இம்முறை புலனாய்வுக் கெடுபிடி

யாழ்ப்பாணம், மார்ச் 16
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது இம்முறை புலனாய்வாளர்களின் கெடுபிடி அதிகரித்திருந்ததை அவதானிக்கமுடிந்தது.
கச்சதீவு முன்னரங்கப் பகுதியில் கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகளைத் தொடர்ந்து உள்நுழைந்த ஊடகவியலாளர்களை 15



## கச்சதீவுப் பெருவிழா நேற்றுப் பக்திபூர்வம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி நேற்றுக் காலை பக்திபூர்வமாக 15

## மோடியின் பயணத்தில் இருதரப்பு ஒப்பந்தங்கள்

கொழும்பு, மார்ச் 16
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான பயணத்தின்போது பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகவுள்ளன என்று வெளிவிவகார 15

## கச்சதீவில் குவிந்தோர் 8,000+

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ்ப்பாணம் கச்சதீவுப் பெருவிழாவுக்காக இம்முறை 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வருகை தந்தனர் என்று தகவல்கள் வெளியாகி 14

## ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

நாடாளுமன்றில் சாணக்கியன் கேள்வி



கொழும்பு, மார்ச் 16
இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் ஸ்ரீலங்காப் படையினரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படையினரால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட எத்தனையோ பேர் உள்ளனர். இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்ட படையினருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என்று 15

## பளையில் விபத்து இளைஞர் இறப்பு!

கிளிநொச்சி, மார்ச் 16
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் 15



'சுழற்சி முறையில வைச்சிருக்கிறதுக்கு எம்.பி. பதவியை சொப்பன சுந்தரியின்ர கார் எண்டு நினைச்சிட்டினம் போல...'

## பாலியல் வன்புணர்வுகளில் இராணுவம் ஈடுபடவில்லை!

நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 16
படையினர் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டனர் என பாரதூரமான குற்றச்சாட்டை சாணக்கியன் முன்வைத்துள்ளார். அவ்வாறு பாலியல் வன்புணர்வு 15

சஞ்சீவி

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 15.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4018
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள்: 12 37 40 62
விசேட எழுத்து A

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 15.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1085
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள்: 05 09 35 49

**NLB ஜய**
திகதி 15.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 044
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள்: 1 4 1 2

**மெகா பவர்**
திகதி 15.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2124
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள்: 27 40 70 79

**மஹஜன சம்பத**
திகதி 15.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5776
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள்: 9 1 9 6 4 2

**தன நிதானய**
திகதி 15.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1806
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள்: 24 28 43 49
விசேட எழுத்து W

**அத சம்பத**
திகதி 15.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0351
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள்: 9 6 4 2

# மீனவர்களை மோதவிட்டு குளிர்காயும் அரசாங்கம்

## இராமேஸ்வரம் மீனவர் கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

**வயிற்றுப்பிழைப்புக்காக வருகைதரும் மீனவர்கள்மீது எந்த ஒரு நாடும் செய்யாத கொடுமையான செயலை இலங்கை அரசு செய்கின்றது. வாடகை வீட்டில் இருக்கும் ஒருவரை உடனே வெளியேறு என்று சொல்ல முடியாது. எனவே இரண்டு நாட்டு மீனவர்களையும் வைத்துப் பேச்சு நடத்தி சிறந்த முடிவை எடுக்கவேண்டும்.**

இவ்வாறு இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் கூட்டமைப்பின் தலைவர் ஜேசுராஜா தெரிவித்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினை என்பது 40 வருடகாலமாகத் தொடர்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவரும் முன்வருவதில்லை . தற்போது சமீப காலமாக இரண்டு நாடுகளிலும் ஆட்சிமாற்றம் வந்துள்ளது. இருந்தபொழுதிலும் தமிழக மீனவர்கள் அடிக்கடி எல்லைதாண்டுவதாகக் கைதுசெய்யப்படுவதும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் அதிகளவு வழக்குகள் தொடரப்பட்டு தண்டப்பணம் விதிப்பதும் நிகழ்கின்றன. வயிற்றுப் பிழைப்புக்காக வருகைதரும் மீனவர்கள்மீது எந்த ஒரு நாடும் செய்யாத கொடுமையான செயலை இலங்கை அரசு செய்கின்றது. நாங்கள் தொழில் செய்கின்ற இந்தக் கடலில் உடனடியாக வெளியேறு என்றால் எங்கே போவது? இலங்கையில் ஆட்சி மாற்றம் வந்தவுடன் எங்களுடைய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுவரும் என எதிர்பார்த்தோம். ஆனால் இந்த அரசாங்கமும் கடந்தகால அரசுகளைப்போல மீனவர்கள் பிரச்சினையை முடிப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இரண்டு நாட்டு மீனவர்களையும் வைத்துப் பேச்சு நடத்தி சாதக, பாதகமான விடயங்களை ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்கவேண்டும். இதற்குச் கச்சதீவு அந்தோனியார் அருள்புரிய வேண்டும்- என்றார். (ச-125)

**சுபிரி தன சம்பத**
திகதி 15.03.2025 தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0484
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 7 9 5 2 0 6

**Super Ball**
திகதி 15.03.2025 தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2750
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 30 37 58 66

**சனிதா**
திகதி 15.03.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 11 42 48 77
வெற்றி வாரம் 4911

**SASIRI**
திகதி 15.03.2025 தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0643
வெற்றி இலக்கம் 15 30 43

**லக்ன ராசி**
திகதி 15.03.2025 தினம் சனிக்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம் 11 22 45 47
சீட்டிழுப்பு வாரம் 4462

**KAPRUKA**
திகதி 15.03.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து L
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கம் 11 24 34 49
வெற்றி வாரம் 1926

**அத கோடிபதி**
திகதி 15.03.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 02 18 44 53
வெற்றி வாரம் 2576



## வெடிக்காத துப்பாக்கி ரவைகள் முல்லையில் பெருந்தொகை மீட்பு

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவு - சிலாவத்தை தியோநகர் காட்டுப்பகுதியில் ஆயிரக்கணக்கான துப்பாக்கிரவைகள் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காட்டுப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருப்பதாக கடற்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த கடற்படையினரும், முல்லைத்தீவுப் பொலிஸாரும் சம்பவ இடத்தைச் சோதனையிட்டுப் பார்த்தபோது உரப்பை ஒன்றைக் கண்டுபிடித்தனர். குறித்த உரப்பையில் இருந்து ஆயிரத்து 400 ரி-56 ரக துப்பாக்கிரவைகள் வெடிக்காது பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டன. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## கிராண்ட்பாஸில் சகோதரர்கள் வெட்டிக்கொலை

கொழும்பு, மார்ச் 16



கொழும்பு - கிராண்ட்பாஸின் வெஹெரகொடெல்லப் பகுதியில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு சகோதரர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது..

கூர்மையான ஆயுதத் தாக்குதல்களில் காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தோர் 23 மற்றும் 24 வயதுடைய சகோதரர்கள் என்று கூறப்படுகிறது.

கொலையைச் செய்த சந்தேகநபர்கள் தப்பிச்சென்ற நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-சீ)

## கச்சதீவில் மரநடுகை

யாழ்ப்பாணம், மார்ச் 16

கச்சதீவில் சம்பிரதாய பூர்வமாக மரநடுகை நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் யாழ். இந்திய துணைத்தூதுவர், சிவகங்கை மறைமாவட்ட ஆயர், யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர், இலங்கைக் கடற்படைத் தளபதி ஆகிய பிரதிநிதிகள் பங்கெடுத்தனர். (ச-125)

## 3 வருடத்திலே 30 வீதம் மின்கட்டணம் குறையும்

கொழும்பு, மார்ச் 16

மின்சாரக்கட்டணத்தை மூன்று வருடங்களில் நூற்றுக்கு 30 சதவீதம் வரை குறைத்து ஸ்திர நிலையில் கொண்டு செல்வதே அரசாங்கத்தின் திட்டம். அதற்கான நடவடிக்கை தற்போது இடம்பெற்றுவருகிறது என வலுசக்தி அமைச்சர் அருண கருணாதிலக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வழக்கமாக ஒரு வருடம் முழுவதும் நிலக்கரியை இருப்பில் வைத்திருக்க உத்தரவிடுவதால், நிலக்கரி செலவுக் குறைப்பின் பலனை நிர்ணயிக்கமுடியாது.

எனவே, ஒரு வருடத்துக்குள் ஏற்படும் நிலக்கரி விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப மின்கட்டணங்களை நாங்கள் சரிசெய்யமுடியாது என்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டங்களின் ஓட்டையால் தலைகுனிகின்றது தேசம்

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**சர்வதேச ரீதியாகவும் நாடு தழுவிய ரீதியிலும் மகளிர் தினம் தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்றுவரும் நாள்களில் ஒரு பெண் மருத்துவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்ட செய்தி தேசத்துக்கு அவமானத்தைத் தருகிறது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்ட அறிக்கையில்,

காலம் காலமாக இலங்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படும் சூழல் நிலவிவருகிறது.

பாலியல் துஷ்பிரயோகம் என்பது இனமுறுகலில் ஆதிக்கத்தனத்தை வெளிக்காட்டும் அங்கீகரிக்கப்பட்ட கருவியாகப் பயன்பட்டது. அதனால் ஏராளமான தமிழ்ப் பெண்கள் பாதிக்கப்பட்டார்கள். அவற்றுள் வெளிவந்த கதைகளைவிட சமூக கலாசார இரும்புக் கதவுகளைத் தாண்டி வெளிவராத செய்திகள் ஏராளம். இந்த விடயங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் சனல் 4 உள்ளிட்ட தரப்புகள் வலுவாகச் சுட்டிக்காட்டியபோதும் அதுகுறித்து கருத்தில் எடுக்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாகவே அநுராதபுர சம்பவத்தைப் பார்க்கவேண்டியுள்ளது. சட்டங்களை புதிதாக உருவாக்குவதற்கு அப்பால் இருக்கின்ற சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவது குறித்து பலமான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.- என்றுள்ளது. (ச-இ)

# ஜனாதிபதி அநுர வாய்ச்சொல் வீரர்

## சாடுகின்றது ஐ.ம.ச.

கொழும்பு, மார்ச் 16

ஊழல், மோசடியாளர்களை மட்டுமன்றி குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக்கூட சட்டத்தின்முன் நிறுத்தமுடியாது போயுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெறும் வாய்ச்சொல் வீரர் மாத்திரமே என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெறும் வாய்ச்சொல் வீரர் மாத்திரமே என்பது தற்போது வெளிப்பட்டுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்று இத்தனை மாதங்கள் கடந்துள்ளபோதும், ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய ஒருவர்கூட இதுவரை சட்டத்தின்முன் நிறுத்தப்படவில்லை.

தேசபந்து தென்னக்கோனைக்கூட இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இரவு வேளைகளில் வீடு வீடாகச் சென்று அவரைத் தேடுகின்றனர். அதேபோன்று துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய செவ்வந்தி என்ற சந்தேகநபரும் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. ஊழல், மோசடிக்காரர்களைக் கைதுசெய்வதாகக் கூறியவர்களுக்கு இவ்வாறான சந்தேகநபர்களைக்கூட கைதுசெய்யமுடியாத நிலைமையே காணப்படுகிறது - என்றார். (எ-இ)

# அரசியல் நடவடிக்கைகள் பாடசாலைகளில் கூடாது


## கல்விப் பிரதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 16

அரசியல் நடவடிக்கைகளுக்குப் பாடசாலைகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என கல்விப் பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் பாடசாலைகளுக்குள் செல்வதைத் தடைசெய்வது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் பாடசாலைகளில் நடைபெற்ற விழாக்களில் பங்கேற்பதைக் காண முடிந்தது. அரசியல்வாதிகள் பாடசாலைகளுக்குச் செல்வதில் தடை உள்ளதா அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே செல்ல முடியுமா என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். அரசியல்வாதிகள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைகளுக்குள் அரசியல் செய்யக் கூடாதே தவிர அரசியல்வாதிகள் பாடசாலைகளுக்குச் செல்லக்கூடாது என எங்கும் குறிப்பிடப்படவில்லை- என்றார். (எ-இ)



# யானையின் உறுப்பினர் ரெலிபோனுக்குத் தாவல்

கொழும்பு, மார்ச் 16

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் லக்ஸ்மன் விஜேமான்ன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கையில் அதிருப்தியுற்று இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# தமிழ் மக்கள் கூட்டணி மன்னாரில் கட்டுப்பணம்

மன்னார், மார்ச் 16

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நகரசபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை மன்னார் தேர்தல் திணைக்களத்தில் செலுத்தியது.

மன்னார் நகரசபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையிலான குழுவினர் கட்டுப்பணத்தைச் செலுத்தினர். (ச-56)





# துஷ்பிரயோக சந்தேகநபரின் வீட்டிலிருந்து கைக்குண்டு மீட்பு

கொழும்பு, மார்ச் 16

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய நபர் வசித்துவந்த வீட்டில் இருந்து கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காவி உடை ஒன்று, தேரர்கள் வைத்திருக்கும் விசிறி, ஒரு போர்வை மற்றும் ஒரு தாள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு பைக்குள் இருந்தே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# ஐ.ம.ச. மேயர்கள் விவரம் அடுத்த வாரம் வெளியாகும்

## ஐக்கிய மக்கள் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட ஏனைய மாநகரசபைகளுக்கான மேயர் வேட்பாளர்கள் யார் என்பதை 19 அல்லது 20ஆம் திகதி அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அடுத்த வாரம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் தேசிய வேட்புமனு தயாரித்தல் குழு கூடவுள்ளது. அதன் பின்னரே வேட்புமனுத்தாக்கல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். நாடாளுமன்ற அமர்வுகளுக்கு மத்தியிலும் தேர்தலுக்கான பணிகளைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்றோம். கடந்த தேர்தல்களைப்போல அன்றி இந்தமுறை தேர்தலில் சிறந்த வெற்றியை எம்மால் பெற்றுக்கொள்ளமுடியும். அரசாங்கத்தின்மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். அதுவே எமது வெற்றிக்கு ஏதுவான காரணியாக அமையும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கதையாக நீள்கின்றது மேய்ச்சல் தரவைப் பிரச்சினை

ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, மார்ச் 16

**வன்னிப் பிரதேசத்தில் ஏறக்குறைய 3இலட்சத்து 70ஆயிரம் கால்நடைகள் காணப்படுகின்றபோதிலும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவையின்மையால், கால்நடைவளர்ப்பாளர்கள் அவதியுறுகின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் கால்நடைகளும், மன்னார் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் கால்நடைகளும், வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 30ஆயிரம் கால்நடைகளுமாக, வன்னிப் பகுதியில் மொத்தமாக ஏறக்குறைய 3 இலட்சத்து 70 ஆயிரம் கால்நடைகள் காணப்படுகின்ற நிலையில் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை இல்லாத சிக்கலான நிலமை காணப்படுகின்றது. இதனால் கால்நடைகளை வீதிகளின் இருமருங்கிலும் மேயவிடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்தச் சிக்கல் நிலைமைகளைக் கருத்தி கொண்டு கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை நிலங்களை ஒதுக்கித்தர வேண்டும் - என்றார். (ச-இ)



சென்.பற்றிக்ஸ் கல்லூரி

## 175 ஆவது ஆண்டின் நடைபயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். பத்திரிசியார் கல்லூரியின் 175ஆவது ஆண்டின் நடைபயணம் நேற்றுமுன்தினம் கல்லூரி முன்பாக இடம்பெற்றது. புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பமான நடைபயணம் பற்றிக்ஸ் பிரதான வீதி, கண்டி வீதி, மருத்துவமனை வீதி, மணிக்கூட்டு வீதி, யாழ் பொது நூலக வீதியூடாக வந்து மீண்டும் பத்திரிசியார் கல்லூரியை வந்தடைந்தது. கல்லூரியின் உப அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அணிவகுப்பு மரியாதை, தமிழ்க் கலை, கலாசார ஊர்வலம், விளையாட்டு அணிவகுப்புகள், கல்லூரியின் விஞ்ஞான, கலை, சுகாதார மன்ற அமைப்புகளின் அணிவகுப்புகள் என்பன இடம்பெற்றன. (ச-27)



## கலைஞர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு புளியங்கூடல் இராஜமகாமாரி அம்பாள் ஆலய சிவன்பார்வதி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலர் க.சிவகரன் , ஊர்காவற்றுறை வேலணை உதவிப் பிரதேச செயலர்கள், மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,9)



## செயற்பட்டு மகிழ்வோம்

அராலி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அதிபர் திருமதி செல்வராணி இந்திரகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ. நோபேட் உதயகுமார், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சுயாதினி அனுரா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச-25,555)

## ரயர் வெடித்ததில் பீதியுற்ற மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வாகனம் ஒன்றின் ரயர் பெரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதை அடுத்து வீதியால் சென்ற மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடியுள்ளனர். இந்தச் சம்பவம் கோப்பாயில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்தின் ரயர் திடீரென வெடித்ததையடுத்தே மக்கள் பீதியுற்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-25, 17)



## முழுநிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 16

உரும்பிராய் கீர்த்திகா பல்பொருள் அங்காடியின் அனுசரணையில் 'முழுநிலா நாள்' கருத்தரங்கு நிகழ்வு, உரும்பிராய் ஞான வைரவர் கோயிலடி சனசமூக நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சமூக சேவகரும் இயற்கை ஆர்வலருமான சி.சுந்தரேஸ்வரன் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"எனும் தலைப்பில் உரையாற்றினார். (ச-25)




## மாணவர்கள் மதிப்பளிப்பு

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையினரின் ஏற்பாட்டில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 31மாணவர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மதிப்பளிக்கப் பட்டனர். கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ். பகீரதன் கலந்துகொண்டனர். (ச-25,9)

## தேங்காய்கள் மாயம்; திருடர்கள் கைவரிசை

கொழும்புத்துறையில் தென்னைமரங்களில் தேங்காய்கள் அதிகளவில் களவாடப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மக்கள் குடியிருக்காத காணிகளிலுள்ள தென்னைமரங்களில் இவ்வாறு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர். தேங்காய் விலை அதிகரிப்பே இதற்குக் காரணம் எனவும் பாதிக்கப்பட்டோர் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (ச- 25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சங்கமம்: வடக்கிலுள்ள பெண் தொழில் முனைவோருக்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துவோம்












வலுவூட்டல், தொழில் முயற்சியாண்மை மற்றும் கலாசார பன்மைத்துவம் ஆகியவற்றின் துடிதுடிப்பான ஒரு கொண்டாட்டமாக, "சங்கமம்" (ஒன்றியம்) எனப் பெயரிடப்பட்ட, பெண்களின் உழைப்பைக் காண்பிக்கும், பல்வேறு செயற்பாடுகள் நிறைந்த பன்முகச் சந்தை மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா நிகழ்வானது 2025 மார்ச் 7 அன்று யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் பெடரல் வெளிநாட்டு அலுவலகம் ஆகியவற்றின் இணை நிதியனுசரணையுடன், இலங்கையில் சமூக ஒருமைப்பாடு மற்றும் சமாதானத்தினை வலுப்படுத்தல் (SCOPE) கூட்டாண்மையுடன் விழுது நிறுவனத்தால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண்களையும் உள்வாங்கும் வணிக வளர்ச்சியுடன், பாலின சமத்துவத்திற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துவதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

பரந்தளவில் முன்னெடுக்கப்பட்ட, 2025 சர்வதேச மகளிர் தின பிரச்சாரமான #AccelerateAction என்பதன் ஒரு அங்கமாக இந்த முயற்சி அமைந்துள்ளதுடன், பாலின சமத்துவ முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதை விரிவுபடுத்தி, தற்போது காணப்படுகின்ற முட்டுக்கட்டைகளை அகற்றும் தேடலுடன் இது இடம்பெற்றுள்ளது. சந்தை வாய்ப்பு, ஊட்டச்சத்து குறித்த ஆலோசனை மற்றும் கலைகள் மூலமான வெளிப்பாடு ஆகியவற்றினூடாக பொருளாதார வாய்ப்புக்கள், கலாசார பாரம்பரியம் மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றை ஆராய்வதற்காக பெண் தொழில் முனைவோர், கொள்கை வகுப்பாளர்கள், சிவில் சமூக அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் போன்ற தரப்பினரை ஒன்றுதிரட்டி உள்ளக அரங்கில் இடம்பெற்ற ஒரு நாள் நிகழ்வாக இது ஏற்பாடு செய்யப்பட்டது.

## பொருளாதார உள்வாங்கலுக்கு பெண் தொழில் முனைவோருக்கு வலுவூட்டுதல்

போர், பொருளாதார தளம்பல், மற்றும் காலநிலை சவால்கள் ஆகியவற்றின் நீண்ட கால தாக்கங்களிலிருந்து இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்ச்சியாக மீட்சி கண்டு வருகின்றன. இப்பிராந்தியங்களில் பெண் தலைமைத்துவ வணிக முயற்சிகள் வரலாற்றுரீதியாக போராட்டங்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளதுடன், நிதி வசதிகளைப் பெறுவதற்கு போதிய வாய்ப்புக்களின்மை, மற்றும் பிரதான வணிகத் துறை சார்ந்த வலையமைப்பில் உள்வாங்கப்படாமை ஆகியன பாரதூரமான பிரச்சனைகளாகக் காணப்படுகின்றன. விழுது அமைப்பு வழங்கும் சேவைகள் மூலமாகப் வபயன்பெற்று வருகின்ற சமூகங்களிலிருந்து பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட 30 தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவுடன் இயங்கும் விற்பனையாளர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் தமது திறமைகளைக் காண்பித்தனர். போரினால் பாதிக்கப்பட்ட பெண் தொழில் முனைவோர் மற்றும் வலுவிழந்த நபர்கள் ஆகிய தரப்பினர் புதிய வாடிக்கையாளர்களை எட்டவும், சாத்தியமான வணிகக் கூட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் மற்றும் பரந்த பொருளாதாரம் குறித்த அனுபவத்தை பெற்றுக்கொள்ளவும் உகந்த ஒரு மேடையை இந்த பன்முகச் சந்தை நிகழ்வு அவர்களுக்கு வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் மேன்மைதங்கிய கார்மென் மொரேனோ அவர்கள் இம்முயற்சி குறித்து கருத்து தெரிவிக்கையில், நெகிழ்திறனும், அமைதியும் கொண்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு பெண்களின் பொருளாதார வலுவூட்டல் அவசியம் என்பதை வலியுறுத்தினார். "பெண்களின் வணிகங்கள் மீது நாம் முதலீடு செய்து, ஒன்றிணைத்து உழைப்பதற்கு சமூகங்களை ஊக்குவிப்பதால், அவர்கள் சொந்தக்காலில் நிற்பதற்கு நாம் முதலீடு செய்வதுடன், அவர்களுடைய சமூகங்கள் சொந்தக்காலில் நிற்பதையும், அவற்றின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதிலும் நாம் முதலீடு செய்கின்றோம். சந்தையில் பெண் தொழில் முனைவோரின் பங்கேற்பானது இலங்கையில் சமூக ஒற்றுமை மற்றும் நீண்ட கால ஸ்திரத்தன்மை ஆகியவற்றை வலுப்படுத்துகின்றது," என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த உதவியை வழங்குவதில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மனி ஆகியவற்றிற்கு இடையிலான ஒத்துழைப்பை வலியுறுத்திய, இலங்கைக்கான ஜேர்மனி தூதுவர் மேன்மைதங்கிய பீலிக்ஸ் நியூமான் அவர்கள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில், "நாட்டின் அனைத்து பாகங்களிலிருந்தும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் ஆதரவுடன் இலங்கை பொருளாதாரத்தின் அத்திவாரம் நிலைபெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மனி ஆகியவற்றின் ஆதரவுடன் இடம்பெறும் பெண்களுக்கான பன்முகச் சந்தை போன்ற நிகழ்வுகள், வணிகத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ளடக்கம் மற்றும் பன்மைத்துவத்திற்கு ஊக்கமளிப்பதுடன், குறிப்பாக பெண் தலைமைத்துவத்திற்கு ஊக்கமளிக்கின்றன. இவ்வாறு குறிப்பிட்ட பிரிவை இலக்கு வைத்து வழங்கப்படுகின்ற உதவிகள், பெண்கள் மத்தியில் காணப்படுகின்ற, இன்னமும் வெளிக்கொண்டுவரப்படாத வளர்ச்சிவாய்ப்புக்களை ஊக்குவித்து, இலங்கையின் தனியார் துறையைப் பொறுத்தவரையில், அதன் பொருளாதார மீட்சிக்கு இடமளிப்பதுடன், நாட்டில் பாலின சமத்துவம் மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றுக்கும் அர்த்தமுள்ள வழியில் பங்களிக்கின்றன," என்று குறிப்பிட்டார்.

## கலாசாரம் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு சந்தை

இந்த நிகழ்வில், விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்த நீதி அமைச்சின் சீர்திருத்தங்களுக்கான பிரிவின் மேலதிக செயலாளர் கிறிஷாந்தி மீகஹபொல, நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் ஷானிகா வீரசூரிய உள்ளிட்ட இதனுடன் தொடர்புபட்ட 300 வரையானோரும், 700 பேர் வரையான பொதுமக்களும் பங்குபற்றியுள்ளனர். மன்னார் மாவட்ட செயலாளர் திரு. கனகசபாபதி கனகேஷ்வரன், வட மாகாண உதவிப் பிரதம செயலாளர் டென்சியா மரின்குமார் உள்ளிட்ட விசேட அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன. அவற்றைத் தொடர்ந்து, உள்ளடக்கிய வணிக வளர்ச்சி,தொழில் முயற்சியாண்மை, ஸ்திரத்தன்மை மற்றும் சமாதானம் ஆகியவற்றை வளர்ப்பதில் பெண் தலைவர்களின் வகிபாகம் போன்ற தலைப்புக்களை உள்ளடக்கிய வலுவான குழு நிலை கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. குறிப்பாக போராட்டத்திற்கு பின்னர் போராட்டம் இடம்பெற்ற பிராந்தியங்களில் பொருளாதார நெகிழ்திறன் மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு பெண் தலைமை வணிகங்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது குறித்து வல்லுனர்களும், உள்ளூர் தொழில் முயற்சியாளர்களும் கருத்தாழம்மிக்க விடயங்களை பகிர்ந்தனர்.

இந்த கலந்துரையாடல் நிகழ்வைத் தொடர்ந்து, பொதுமக்களுக்காக சந்தை திறக்கப்பட்டதுடன், பாரம்பரிய உணவுக்கூடங்கள், கலாசார நிகழ்வுகள், மற்றும் புதிய அறிமுகங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு என தனித்துவமான பல்வகைப்பட்ட சிறப்பம்சங்களை வழங்கியது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து பெண் தொழில் முனைவோர் அப்பிரதேசங்களின், பாரம்பரிய உணவுகள், கைவினைப் பொருட்கள் மற்றும் கையால் செதுக்கப்பட்ட கலைப்பொருட்கள் போன்ற பல்வேறுபட்ட தயாரிப்புக்களுடன், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் செழுமைமிக்க பாரம்பரியத்தைக் கொண்டாடினர். வணிகத்தில் பெண்கள் அனேகமாக முகங்கொடுக்கின்ற சமத்துவமற்ற சுமைகளை இனங்கண்டு, அதற்குத் தீர்வாக, பெண் தொழில் முனைவோர் இதில் முழுமையான ஈடுபாட்டுடன் பங்கேற்பதை உறுதி செய்வதற்காக, சிறுவர் பராமரிப்பு சேவை, பெண் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கப்பட்ட, மீள உபயோகிக்கக்கூடிய துணிகளாலான பைகள் வழங்கப்பட்டமை அடங்கலாக விசேட ஏற்பாடுகள் பலவும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## கலை மற்றும் போசாக்கு மூலமாக சமூக ஒற்றுமையை வளர்த்தல்

பொருளாதார வலுவூட்டலுக்கு அப்பால், விழுது மற்றும் பெண் தலைவர்களால் வடிவமைக்கப்பட்டிருந்த நிகழ்வு, சமூக இடைவெளிகளைப் போக்குவதில் உணவு மற்றும் கலாசாரம் ஆகியவற்றின் முக்கியமான வகிபாகத்தை வலியுறுத்தியது. உணவுத் தட்டுப்பாட்டை அதிகரிக்கச் செய்துள்ள சமீபத்தைய பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், சமூக போசாக்கு மற்றும் பாரம்பரிய உணவுப் பழக்கங்களை கடைப்பிடித்தல் தொடர்பான முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டும் பிரத்தியேக ஆலோசனை அமர்வும் இடம்பெற்றது. நிலைபேறான உணவு நடைமுறைகளை ஊக்குவித்து, நலிவுற்ற சமூகங்கள் மத்தியில் உணவு நெகிழ்திறனை உறுதி செய்யும் விரிவான முயற்சியாக உள்நாட்டு உணவுகள் மற்றும் உணவுப் பாரம்பரியங்கள் தொடர்பான விளக்கங்களும் இடம்பெற்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், பகிரப்பட்ட பாரம்பரியத்தைக் கொண்டாடுதல் மற்றும் சமூகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை வளர்த்தல் ஆகியவற்றுக்காக, இசை நடனம் மற்றும் கதை வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன. கொழும்பு இளையநிலா இசைக்குழுவின் பிரபல இசை நிகழ்வு பெருந்திரளான எண்ணிக்கையில் மக்களை ஈர்த்ததுடன், கலை நிகழ்வுகள் பலவும் பன்மைத்துவத்தினூடாக ஐக்கியத்தை வளர்க்கும் இந்நிகழ்வின் மூலமான செய்தியை மீளவும் உறுதிப்படுத்தும் வகையில் கிராமிய, உள்நாட்டு மற்றும் பாரம்பரிய உணவுக் கலாசாரங்களுக்கிடையிலான ஆழமான பிணைப்புக்களை அடிக்கோடிட்டுக் காட்டும் வண்ணம் சேர் பொன்னம்பலம் ராமநாதன் நுண்கலைக் கல்லூரி, யாழ் பல்கலைக்கழகத்தின் கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகள் பீடம், மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் கல்லூரி ஆகியவற்றின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## முன்னோக்கிய பயணம்: இதே ஆர்வத்தையும், வேகத்தையும் தக்கவைத்தல்

பெண்களின் பன்முகச்சந்தை மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா நிகழ்வானது இதில் பங்குபற்றியுள்ள தொழில் முனைவோருக்கு உடனடி பொருளாதார நன்மைகளை வழங்கியுள்ளது மாத்திரமன்றி, இலங்கையில், நீண்ட கால அடிப்படையில் அவர்களை உள்ளடக்கும் வகையிலான வணிக நடைமுறைகளுக்கான அடிப்படை வேலைத்திட்டங்களுக்கும் வழிகோலியுள்ளது. பெண் தலைமைத்துவ வணிகங்கள் மீது முதலீடு செய்வது, வெறுமனே ஒரு பாலின சமத்துவப் பிரச்சனை தொடர்பானது மாத்திரமன்றி, நிலைபேறான அபிவிருத்தி, பொருளாதார மீட்சி மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பல் ஆகியவற்றுக்கான ஒரு முக்கியமான மூலோபாயமுமாகும். SCOPE மற்றும் விழுது போன்ற சிவில் சமுதாய அமைப்புக்கள் தற்போது வழங்கி வருகின்ற ஆதரவுடன், இந்நிகழ்வு தோற்றுவித்துள்ள உத்வேகத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து, வணிகம் மற்றும் சமூக அபிவிருத்தியில் பெண் தலைமைத்துவத்தை ஊக்குவிக்கும் முயற்சிகள் பலவற்றை இவ்வாறு ஏற்பாடு செய்ய முடியும். நலிவுற்ற தொழில் முனைவோரை தொடர்ந்தும் பொருளாதார மதிப்புச் சங்கிலியுடன் ஒருங்கிணைத்து, அனைவருக்கும் உள்ளடக்கமான, அமைதியான மற்றும் சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி இலங்கை மேலும் ஒரு அடி நெருங்கியுள்ளது.









# பட்டலந்த வதைமுகாம்; நீதியை நிலைநாட்டுக

## எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 16

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் மட்டுமன்றி அந்த முகாம்கள் உருவானமைக்குக் காரணமாக இருந்த விடயங்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்தி உண்மையைக் கண்டறியவேண்டும். இந்த வதை முகாமில் கொல்லப்பட்ட சகல தரப்பினருக்கும் நீதியை நிலைநாட்டவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மீதான விவாதத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டலந்த சம்பவம் , ஏன் உருவானது என்ற பிரச்சினை உள்ளது. 1988 1989 ஆம் ஆண்டு காலத்தில் பயங்கரவாதம் இருந்தது. அதனால் இரு தரப்பிலும் 60 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர். இந்த வரலாறு மூடப்பட்டிருந்தது. அரசாங்கம் ஆட்சிக்குவந்த மறுநாளே நினைவுக்கு வரவேண்டிய விடயம் அல்ஜெஸீராவில் கூறப்பட்டதை தொடர்ந்தே நினைவுக்கு வந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் தேடிய நிறுத்து அது தொடர்பில் நியாயத்தை நிலைநாட்ட வேண்டும். விசாரணை பக்கசார்பாக இருக்கக்கூடாது. உண்மையைத் தேடியறியவேண்டும் - என்றார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சிதரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சியடைவீர்கள்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்** : இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**மகரம்:** அதிர்ஷ்டமும் நல்ல வாய்ப்புகளும் ஏற்படும் நாளாக இருக்கும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்:** தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். சிலருக்கு பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை இன்று நிறைவேற்றும் வாய்ப்புஏற்படும்.



## பச்சிலைப்பள்ளியில் விற்பனைச் சந்தை

பளை, மார்ச் 16

மகளிர் தினத்தை முன்னிட்டு, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் தொழிற்றுறை திணைக்களம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான மாதாந்த விற்பனைச் சந்தைப் பிரதேச செயலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-25,9)

## வல்வெட்டித்துறையில் சுயேச்சையுடன் மான் கூட்டணி

யாழ்ப்பாணம், மார்ச் 16

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வல்வெட்டித்துறை நகரசபையில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாகத் தமிழ் மக்கள் கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியினர் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை யாழ். தேர்தல் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை செலுத்திய பின்னர் கூட்டணியின் யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இதனைத் தெரிவித்தார். (ச-25,26-20)




## கடற்றொழில் அமைச்சருடன் இந்திய மீனவர் நட்பு பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரை இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர் கூட்டமைப்பின் சங்கத்தினர் குழாம் நட்புறவின்பால் சந்தித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருநாள் திருப்பலி நேற்று காலை 9 மணியளவில் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ச-125)



## வனவிலங்குகள் கணக்கெடுப்பு


கிளிநொச்சி, மார்ச் 16

விவசாய மற்றும் கால்நடைவளம் நிலம் நீர்ப்பாசன அமைச்சினால் விவசாயப்பயிர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தும் வனவிலங்குகள் பற்றி முன்னெடுக்கப்படும் தேசிய கணக்கெடுப்புக்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்ட படிவங்கள் மூலம் பயிர்நிலங்கள், வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் பொது இடங்களில் நேற்று கணக்கெடுப்பு இடம்பெற்றது. (ச-41-113)

## பாலர் சந்தை !

யாழ்ப்பாணம், மார்ச்.16

யாழ்ப்பாணம், கோப்பாய் உதயசூரியன் முன்பள்ளி யின் பாலர்களின் பாலர் சந்தை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் கலந்துகொண்டு, பாலகர்களின் திறன்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களிடம் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்தார். (ச-22,20)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## இந்தப் பாவங்கள் தமிழர்களைச் சேராது!

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் அண்மைக்கால மாக தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கு இடையிலான மோதலை ஏற்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வலிந்து கருத்துகளைத் தெரிவித்து வருகின்றார். நாடாளுமன்ற முறைதவறிய சமூக நெறிதவறிய அவரின் வார்த்தைப் பயன்பாடுகள், நாடாளுமன்றத்துக்குள் மட்டுமல்லாமல் நாடாளு மன்றத்துக்கு வெளியிலும் அளவுக்கு அதிகமாகக் கக்கப்பட்டு வருகின்றன. ஒரு தனிநபராக அவர் இந்த வெறுப்புணர்வுகளை விதைத்துக் கொண்டிருந்தால், அது அவரது தனிப்பட்ட பிரச்சினை. ஆனால், தற் போது அவர் மக்கள் பிரதிநிதி என்பதால், அவரைத் தெரிந்தெடுத்த மக்களும் இந்த அநாகரிகச் செயல் களுக்குப் பாத்திரவாளியாகின்றனர். எனவே, இந்த விடயத்தில் சில தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டிய பொறுப்பு இப்போது சமூகக் கடமை யாகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பல்லாயிரம் முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளின் உத்தரவின் அடிப்படையில் வெளியேற்றப்பட்டனர் என்பது உண்மை. ஆனால், அதற்காக அந்தச் சமூகத்தை புலிகள் வெறுத்து ஒதுக் கினர் என்று அர்த்தமில்லை. ஒருசில நபர்களினதும் - சில பிரதிநிதிகளினதும் செயற்பாடுகள் ஒட்டு மொத்த விடுதலைப் போராட்டத்தையும் வேறுக் கும் வகையில் அமைந்ததால் அந்த முடிவு (வெளியேற் றம்) அன்று புலிகளுக்கு அவசியமாக இருந்தது. மற்றும்படி முஸ்லிம்கள் மீது புலிகள் எந்தவித வன் மத்தையும், வக்கிரத்தையும் கொண்டிருக்கவில்லை. பின்னர் இந்த வெளியேற்றுகைக்காக புலிகள் மன்னிப்புக்கேட்டதுடன், முஸ்லிம்களை மீளக்குடிய மர்த்தவும் தமது ஒத்தாசைகளை வழங்கி இருந்தனர்.

அதேவேளை, தமிழர்களின் விடுதலைப் போராட் டத்தில் தம்மை இணைத்துக்கொண்ட முஸ்லிம்கள் ஏராளமானோர் உள்ளனர். பல முஸ்லிம் போரா ளிகள் களப்பலியாகியுள்ளனர். ஆதலால், தமிழர் களுடன் ஒன்றித்த முஸ்லிம்களையும், அவர்களின் உணர்வையும் கொச்சைப்படுத்துவதும், நெறி முறைகளுக்கு முரணாக விமர்சிப்பதும் அபத்த மானது. கடந்த காலங்கள் எவ்வாறு இருந்தாலும், அவை அனைத்துக்கும் பொத்தம் பொதுவான முற்றுப்புள்ளியை வைத்துவிட்டு, 'சிறுபான்மை இனமாக' ஒன்றிணைந்து பயணிப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் ஓர் உண்மை யான மக்கள் பிரதிநிதிக்கு அழகு. அதைவிடுத்து மக்களை உசுப்பி விடுவதும், கவனக்குவிவைப் பெற வேண்டும் என்பதற்காக இனவாதக் கருத்துகளை வெளியிடுவதும் அபத்தமானது. மொழியால் முஸ்லிம்களும் எம் உறவுகளே. எனவே, அவர்கள் மீது நிகழ்த்தப்படும் இந்தத் திட்டமிட்ட தாக்குதல் களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது சகித்துக்கொள்ளவோ கூடாது. இவ்வாறான நெறிதவறிய சமூகத் தாக்குதல்களுக்கு எதிராக நாங்கள் மௌனித்திருப்போமானால், அது இன் னொரு வரலாற்றுத் தவறாகவே அமையும். அதே வேளை மக்களும் களையெடுக்க வேண்டிய விஷப் பூச்சிகளைப் புரிந்தும் தெளிந்தும் செயற்பட வேண்டும்.

இது தவக்காலம்! இயேசுக் கிறிஸ்துவுக்கு எதிரான தீர்ப்பை எழுதுவதற்கு முன்னர், அவருக்கு மரணதண்டனையைக் கோரிய தலைமைச் சங்கத்தி னரைப் பார்த்து மன்னர் பிலாத்து, 'இந்தப் பாவங்கள் என்னைச் சேராது' என்றுகூறி கைகழுவிப் பொறுப்புத் துறந்தாராம். அதே நிலைப்பாட்டில்தான் இன்று தமிழர்களும் உள்ளனர். அந்த நாடாளுமன்ற உறுப்பினரின் விஷக்கருத்தால் உண்டாகும் பாவங்கள் ஒருபோதும் தமிழர்களைச் சேராது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### நாளொரு நல்வார்த்தை

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்றுப் போய்விடுகிறது.

– நெப்போலியன் –




அரசு ஊழியர்களுக்கான

## வேதனஉயர்வு அடுத்த மாதம்?



கொழும்பு, மார்ச் 16

வரவு - செலவுத்திட்டத்தில் அதிகரிக் கப்பட்ட சம்பள உயர்வுகளை ஏப் ரல் முதல் அரசு ஊழியர்களுக்கு வழங்க அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

அதற்கமைய, 2025 ஆம் ஆண் டுக்கான வரவு-செலவுத்திட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி நிறை வேற்றப்பட்ட பின்னர், ஒரு வார காலப்பகுதியில் அதிகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஊக்கத்தொகை கள் தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட அரசாங்கம் நடவ டிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை அரச ஊழியர்க ளின் குறைந்தபட்ச மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை 24 ஆயிரத்து 250 ரூபாவிலிருந்து 40ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வும் தற்காலிக இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் சிறப்புக் கொடுப்பனவுகளை அடிப்படைச் சம்பளத்தில் இணைக்கவும் வரவு - செலவுத்திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச-இ)

## இலங்கையில் டாட்டா

கொழும்பு, மார்ச் 15

புதிய அரசாங்கம் வாகன இறக்குமதித் தடையை நீக்கியதை யடுத்து இந்தியாவின் டாட்டாநிறுவனம் அதன் இலங்கை முகவர் டிமோ நிறுவனத்துடன் இணைந்து தமது உற் பத்திகள் அனைத்தை யும் இலங்கையில் விநி யோகிக்கத் திட்ட மிட்டுள்ளது. டாட்டா நிறு வனத்தின் புதிய வாக னங்களின் அறிமுக நிகழ்வு கடந்த வியாழக் கிழமை கொழும்பில் இடம்பெற்றது. (ச-41-6)



## சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 16


மட்டக்களப்பு மொறக்கொட் டாஞ்சேனைக்காட்டை அண் டிய பகுதியில் எறியப்பட்ட நிலையில் உயிரிழந்த ஆண் சிசு ஒன்றின் சடலம் நேற்று மீட்கப்பட் டுள்ளது.

உரைப்பையில் கட்டப்பட்ட நிலையில் அந்தச் சிசு மீட் கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மட் டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (ச-இ)

## பாடசாலை வவுச்சர் காலாவதி நீடிப்பு

பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கென மாணவர்களுக்கு வழங் கப்பட்ட வவுச்சர்களின் காலாவதித் திகதி இந்த மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ள தாகவும் அறிவித்துள்ளது. (ச-25.6)



இலங்கையுடன் தொடர்புபட்ட

## இணையவழி மோசடிக்குழு இந்தியப் பொலிஸாரால் கைது

கொழும்பு, மார்ச் 16

இலங்கையுடன் தொடர்புடைய இணையவழிக் குற்ற வலைப்பின் னல் குழுவொன்று இந்திய டார்ஜி லிங் பொலிஸாரின் பிடியில் சிக்கியுள்ளதாக இந்திய ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தக் குழு டுபாயிலிருந்து இயக் கப்படுவதாகவும் பல்வேறு வங்கிக் கணக்குகள் ஊடாக 200 கோடி இந்திய ரூபாவுக்கு மேற்பட்ட சட்ட விரோதப் பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந் துள்ளது. இந்தக் குழுவின் பிர தான செயற்பாட்டாளர் என நம்பப் படும் செய்துர் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரி விக்கப்படுகின்றது. (ச-25.6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். சிங்கள வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைச் சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் உலர் உணவுப்பொருள்கள் யாழ். நாக விகாரையில் வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.


நிகழ்வில் இங்கிராங்கொட பௌத்தபீடத்தலைவரும் வடமத்திய மாகாண பிரதான மலைத்தலைவருமான ஸ்ரீ கெத்த சீவிலி, நாகவிகார விகாராதிபதியும் சிங்கள வர்த்தக சங்கத்தின் ஆலோசகருமான ஸ்ரீ விமல தேரர், வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், 512 படைப்பிரிவின் மேஜர் ஜென்ரல் நிசாந்த முத்துமால, மேஜர் றுவான் கருணாரட்ன, யாழ் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகள், சிங்கள வர்த்தகசங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதன்போது 100 பாடசாலைச் சிறுவர்களுக்கான சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,20)



# கரைச்சிப் பிரதேசத்தில் கரப்பந்தாட்டப் போட்டி

கிளிநொச்சி , மார்ச் 16

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடர் கிளிநொச்சியிலுள்ள வட மாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் உள்ளக அரங்கில் நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பமாகியது. கரைச்சிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் போல் ராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் எஸ்.பத்மசிறீ கலந்துகொண்டு வீரர்களை அறிமுகம் செய்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.18 கழகங்கள் குறித்த போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ச-25,113)



# இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் தேர்தல்கள் ஆணைக்குழு பாராட்டு



வவுனியா , மார்ச் 16

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை கண்டுபிடித்து வவுனியா மாணவன் சாதனை படைத்துள்ள நிலையில் தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எஸ்.அச்சுதன் அதனைப் பார்வையிட்டு பாராட்டியுள்ளார். வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு நேற்றுச் சென்ற தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் தலைமையிலான குழுவினர் குறித்த மாணவனின் கண்டுபிடிப்பை பார்வையிட்டனர். இதன்போது ஆணைக்குழுவின் ஆணையாளர், இந்தக் கண்டுபிடிப்பை மேலும் விருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்கியதுடன், எதிர்காலத்தில் இதனை மேலும் விருத்திசெய்து தேர்தல் நடவடிக்கைகள், தேர்தல் பயிற்சிகளில் பயன்படுத்துவது குறித்தும் தமது ஆணைக்குழுவுடன் பேசி ஆலோசிப்பதாகவும் தெரிவித்தார். (ச-18)





முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைந்துள்ள மஹ்பூப் சுபுஹானி ஜும்மா பள்ளிவாசலில், மௌலவி பாஷிமாம் முகமது அப்துல் காதர் ஜாஸ்மின் தலைமையில் இப்தார் நிகழ்வு நேற்று சிறப்பாக இடம்பெற்றது. இதில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார். (ச)

# பூசை உபகரணங்கள் வழங்கிவைப்பு

மன்னார், மார்ச் 16

மடு, தம்பனைக்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மடுப் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி பூசை உபகரணங்கள் ஆலய நிர்வாகத்தினரிடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மடு பிரதேச செயலாளர் கீ.பீட் நிஜாகரன், கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோர் இந்தப் பூசை உபகரணங்களைக் கையளித்தனர். (ச-25,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவுனியாவில் திருவள்ளுவர் குருபூசை



வவுனியா, மார்ச் 16

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் குருபூசைதினம் வவுனியா மருத்துவமனைச் சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நகரசபைச் செயலாளர் பாலகிருபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், முன்னாள் நகரசபை உறுப்பினர் சுமந்திரன், முன்னாள் கிராம உத்தியோகத்தர் விஜயகுமார், வெளிச்சம் அறக்கட்டளைத் தலைவர் லம்போதரன், நகரசபை ஊழியர்கள், மகளிர் அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-41-110)




# ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி கிளிநொச்சியில் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டு சபைகளுக்கான கட்டுப்பணத்தை மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை செலுத்தியது.

கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினருமான வைத்தியநாதன் தவநாதன் கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைகளுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தினார். கடந்தமுறை போன்று தனித்துப் போட்டியிடவுள்ளதாகவும் பொதுஅமைப்புகள் சார்ந்தோர் போட்டியிடவுள்ளதாகவும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (ச-41-113)







'தூய இலங்கை' செயற்றிட்டத்தின்கீழ், உடுப்பிட்டி மாத்தோட்டை சிவ ஞானவைரவர் ஆலயத்தில் சிரமதானப்பணி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இமையாணன் கிராமஅலுவலர் மு.அபிராம், அபிவிருத்தி உத்தியோகத்தர் நி.பிரதீபன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் த.சசிதரன் ஆகியோர் சிரமதானக்குக்குப் பங்களிப்பு வழங்கினர். (ச-25)

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம் , மார்ச் 16

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நுண்கலைமாணி கிமாலினியின் தெய்வீக இன்னிசைக் கானம் இடம்பெற்றது. இதில் ஹார்மோனிய இசையை இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்க இசையை கலாவித்தகர் க.சிவகுமார் தபேலா இசையினை வித்துவான் ப.கபிலன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

மாதாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வைத் தொடர்ந்து கோப்பாய் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் கட்டிட கட்டுமானப் பணிக்காக 75 ஆயிரம் ரூபா நிதி வழங்கிவைக்கப்பட்டது. (ச-25-27)



# பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வலயமட்ட பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியிலேயே உடுவில் மான்ஸ் வித்தியாலத்தை 2:1 என்ற நேர் செற்றில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றிபெற்று சம்பியனாகியது. (ச-27,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 1940



மறைவு 14.03.2025

### சுந்தரமூர்த்திசர்மா புவனேஸ்வரி

கரணவாயைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்திசர்மா புவனேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (14.03.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதக் குருக்கள் - கமலாம்பிகை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினக் குருக்கள் - கோமதியம்மா தம்பதியின் அன்பு மருமகளும், சுந்தரமூர்த்திசர்மா அவர்களின் அன்பு மனைவியும், ரவிசங்கர், உதயசங்கர், ஜீவசங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கலாவதி மற்றும் ஈஸ்வரி, பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரக்சிகா, தீபிகா, ஹம்சத்வனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

MS லேன்,
ஸ்ரேசன் றோட், கோண்டாவில் (CS/57752) J-1

தகவல் :
குடும்பத்தினர்

# குளுக்கோமா நோயால் கண்பார்வைக்கு ஆபத்து

### கண் மருத்துவ நிபுணர் சந்திரகுமார் தெரிவிப்பு



குளுக்கோமா நோயானது அறிகுறிகள் இல்லாமல் படிப் படியாக கண்பார்வையை இழக்கச்செய்யும். கண்களைப் பரீட்சித்துப் பார்ப்பதன் மூலமே இதனைக் கண்டுபிடிக்க லாம். இதுகுறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண் டும் என்று கண் மருத்துவ நிபுணர் சர்வானந்தம் சந்திரகு மார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நோயைச் சரியான நேரத்தில் கண்டுபிடிப்பதால் மருந்துகள், லேசர் சிகிச்சை அல்லது சத்திரச்சிகிச்சை மூலம் கட்டுப்பாட் டுக்குக் கொண்டுவ ரமுடியும். ஆனால் அநேகமானோர் நோய் முற்றிய பின்னரே சிகிச் சைக்கு வருகின்ற னர். இதனால் கட் டுப்படுத்துவது கடி னமான விடயம்.

இது அறிகுறி இல் லாத நோய் என்ப தால் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் கண் பரிசோதனை செய்வதன் மூலம் இந்தக்குளுக்கோமா நோயைக் கட்டுப் பாட்டினுள் வைத்தி ருக்கலாம்- என் றார். (ச-41-27)

## மரண அறிவித்தல்

### செல்லம்மா இராசரத்தினம்

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசிப்பவருமான திருமதி செல்லம்மா இராசரத்தினம் அவர்கள் கடந்த 13.03.2025 வியாழக்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், குகதாசன், சிவதாசன், கௌரி , குமாரதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2025) திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
மு.தெய்வேந்திரம் (சகோதரன்)
077 922 8998

மீசாலை. (CR/44577) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 05 . 1942



மறைவு 15 . 03 . 2025

### விஜயரட்ணம் பூரணம்

தையிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் பூரணம் நேற்று (15.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற விஜயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சிவபாலன், வதனா அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வல்லிபுரம், வள்ளியம்மை, செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேகரி வீதி,
தையிட்டி.

தகவல்:
சிவபாலன் (மகன்)
077 624 2837

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 11 . 1972



மறைவு 14 . 03 . 2025

### செல்வி பிரியதர்சினி கனகரத்தினம்

(ஆசிரியை - யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியாலயம்)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரியதர்சினி கனகரத்தினம் நேற்றுமுன்தினம் (14.03.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (ஆசிரியர்) - கலாவல்லி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்வநாதன், அருள்நாதன் மற்றும் பிரேமவல்லி (ஓய்வுநிலை அதிபர் - யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்), மதிவதனி (ஆசிரியர் - யா/ இந்து மகளிர் கல்லூரி), சசிகலா (ஆசிரியர் - யா/ தம்பாட்டி அ.த.க. வித்தியாலயம்), இரவீந்திரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், வசந்தலீலா, சற்குணராசா, விக்கினராசா ஆகியோரின் மைத்துனியும், மதுரா (மாணவி - யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), விதுஜா (மாணவி - யா / இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நாரந்தனை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS29087) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

தலங்காவல் பிள்ளையார் வீதி,பதிவாளர் லேன் இல் வீடு வாடகைக்கு உண்டு.

076 269 5053,077 545 1358

(cs 29926) (s)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்

077 334 1281

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வளமுடன் ஒரு பெண் பிள்ளையுடன் வசிக்கும் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மணமகனுக்கு வாழ்க்கைத் துணை தேவை. சீதனம், மதம் தடையில்லை (40 வயதிற்குள் விரும்பத்தக்கது)

070 777 1388, 077 251 3576

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு செங்குந்தா வீதியில் இரண்டே முக்கால் பரப்பு காணியுடன் சேர்ந்த மேல்மாடி வீடு விற்பனைக்கு.

076 148 1075, 077 864 5502

(CR/44581) J-1

## விற்பனைக்கு

தனங்களப்பு - மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் காய்க்கும் தென்னைகள் நிறைந்த 60 பரப்பு தென்னந் தோட்டம் விற்பனைக்கு.
பகுதி பகுதியாகவும் விற்கப்படும்.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:- 0094 77 425 3573

(CR/445589) J-1

## விற்பனைக்கு

அரைக்கும் ஆலைக்குரிய இயந்திரங்கள்,டீசல் வாட்டர்பம், டீசல் ஜெனரேற்றர்(3kv) என்பன விற்பனைக்கு.

தொடர்பு - 076 297 7078

(cs 2737) (s)

## தேவை

பொதி செய்தல், கூலியாட்கள், மில்வேலை தெரிந்தவர்கள், மில் உபகரணங்கள் (நெல், தானியங்கள்)

தொடர்பு: 077 772 2215

## விற்பனைக்கு


- றீ கண்டிசன் ஜப்பான் சுப்பர் கப் 90 மோட்டார் சைக்கிள் அத்துடன்
- மலிவு விலையில் (நுளம்பு) Mosquto bat

என்பன விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 656 6508



# வீதிப்போக்குவரத்து; மாணவர்களுக்குத் தெளிவூட்டல்!



யாழ்ப்பாணம், மார்ச் 16

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பாதுகாப்பான வீதிப்போக்குவரத்து தொடர்பாக தெளிவூட்டும் நிகழ்வு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி போக்குவரத்துப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.செம்பியன்பற்று அ.த.க பாடசாலை மாணவர்கள் பிரதான வீதிக்கு அழைத்து வரப்பட்டு, எவ்வாறு விபத்துகள் ஏற்படுகின்றன? அதனை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளமுடியும், விபத்துகளில் இருந்து எங்களை எவ்வாறு பாதுகாப்பது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு அறிவூட்டல்கள் வழங்கப்பட்டன. (ச-22, 27)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் - கைதடியில் மாகாண சபைக்கு முன் A9 வீதிக்கு மிக அருகிலும் மற்றும் மானிப்பாய் வீதி, கைதடி சந்தியிலிருந்து ½ km தூரத்திலும் வியாபார நோக்கங்களுக்கும் மாணவர் / தொழில் புரிவோருக்கும் / சிறு குடும்பத்தாருக்கும் தளபாடங்கள். சகல வசதிகளுடனான தங்குமிடம் வாடகைக்குண்டு.

தொடர்பு: 078 567 9674, 076 987 0346

## காணி விற்பனைக்குண்டு

- உரும்பிராய் சிவகுல வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு
- மருதனார்மடம்-உரும்பிராய் காப்பெற் வீதியை முகப்பாக கொண்ட காணி விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:
074 394 4488, 076 663 3199

(CS 2733) V-1

## வேலையாள் தேவை

மின்பொருள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு வேலையாள் தேவை.

- வயது 21-45 இடைப்பட்ட ஆண்.
- Motor bike license அவசியம்.
- யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

075 590 4041

(cs 2734) (s)

## மலிவு விலையில் உயர் தரமான தயாரிப்புகளில் ஆர்வமா? எங்களுக்கு அழைப்பு கொடுங்கள்!

KANSON®
HOME APPLIANCES



Gas Cookers | Rice Cookers | Mixer Grinders | Electric Kettles | Irons

Interested in High Quality Products at Affordable Prices? Give us a call! (Wholesale and Retail)

077 594 2322
0777 814 117

## காணி வாடகைக்கு

யாழ் நகர் ஸ்ரான்லி வீதியில் 3 1/2 பரப்பு காணி வாடகைக்கு உண்டு.

076 565 2122

(cs 2702) (s)

## மணமகள் தேவை

1997, இந்து, றோஹினி, ENGINEER
பூர்வீகம் - இணுவில், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகன் பதிவு இல: 11479.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

(CS/29925A) J-1

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பத்திற்கு தங்கி இருந்து வீட்டு வேலை மற்றும் சமையல் செய்யக்கூடிய இளம் பணிப்பெண் தேவை.

தொடர்பு:- 077 165 8524

(CS/57749) J-1

## வெளிநாட்டில் உயர் கல்வி கற்க புலமைப்பரிசில்கள் உண்டு

UK ▸ USA ▸ CANADA ▸ AUSTRALIA
NEW ZEALAND ▸ MALTA ▸ GERMANY
FRANCE ▸ SPAIN ▸ POLAND ▸ SWEDEN
FINLAND ▸ IRELAND ▸ SINGAPORE ▸
DUBAI ▸ MALAYSIA & INDIA

- விண்ணப்பப் படிவங்கள் நிரப்புதல்
- நிராகரிக்கப்பட்ட மீள் விண்ணப்பம்
- இலவச ஆங்கிலப் பயிற்சி
- குறைந்த கட்டணம்
- மொழிபெயர்ப்பு சேவை, 10 வருட அனுபவம் மற்றும் JP சேவை

VISIT VISA
BUSINESS VISA
STUDENT VISA
DEPENDENT VISA
SETTLEMENT VISA

GET MORE DETAILS: +94767 705 394

HYBRID VISA CENTRE
No: 6 1/1, 37th Lane, Wellawatta, Colombo - 06
+94 112 362 925
hybridcampus.lk
hybridcampus@gmail.com

## மணமகள் தேவை

கொழும்பு இந்து உயர்குலம் 28 வயதுடைய USA இல் Masters Final Year (IT) மகனுக்கு USA இல் PR உள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 0777 888198

## Jaffna College - Vaddukoddai
### Vacancy – Teacher – English Language and Literature

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for a passionate, dynamic, inspirational and hard-working individual for the above position.

Requirements

- Academic Qualifications: Bachelor of Arts Special degree in English.
- Classes to handle: Grade 6 to A/L
- Language Proficiency: Fluency in English

Applicant should be

- an individual with strong values such as honesty, integrity, sportsmanship and work ethics.
- computer literate.

Closing date for applications 26.03.2025.
Applications with the names of two non-related referees should be sent to hr@jaffnacollege.lk

Only short listed candidates will be called for an interview.
Principal

## VISIT VISA

UK ▸ CANADA ▸ AUSTRALIA
NEW ZEALAND ▸ SPAIN ▸
MALTA ▸ GERMANY ▸ ITALY

உடனடிப் பயணம்

GET MORE DETAILS:
+94767 705 394

HYBRID VISA CENTRE
No: 6 1/1, 37th Lane, Wellawatta, Colombo - 06
+94 112 362 925
hybridcampus.lk
hybridcampus@gmail.com

## மணமகன் தேவை

1998, இந்து, அனுசம், DOCTOR
பூர்வீகம் - கரவெட்டி, வதியுமிடம் - கரவெட்டி
மணமகள் பதிவு இல: 11504.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

(CS/29925B) J-1

## மன்னாரில் காணி விற்பனைக்கு

மன்னாரில் 50+ 5P காணியுடன் வீடு, கடை உடனடி விற்பனைக்கு.
மன்னார் நகர பிரதான வீதியில் நன்கு கட்டப்பட்ட வீட்டுடன் கூடிய விசாலமான காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
முதலீடு அல்லது அமைதியான வாழ்க்கைக்கு உகந்தது. உரிமையாளர் வெளிநாடு செல்ல விரும்பதால் உடனடியாக விற்பனைக்கு.
மேலதிக விபரங்களுக்கு

Whatsapp: 074 076 4966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகள் கணக்கெடுப்பு நன்மை பயக்கும்

## வனவளத் திணைக்களம் விளக்கம்



கொழும்பு, மார்ச் 16
விலங்குகள் தொடர்பில் எவ்வகையில் கணக்கெடுப்பை முன்னெடுத்தாலும் சரியான தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனினும் எந்தெந்தப் பிரதேசங்களில் எந்த விலங்குகள் அதிகளவில் வாழ்கின்றன என்பது குறித்த அனுமானத்தை எட்டலாம் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் குறிப்பிடுகையில்,
விவசாயத் திணைக்களத்தின் தலைமையில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. வனஜீவராசிகள் திணைக்களமும் அதற்கு ஒத்துழைப்பை வழங்குகிறது.
எனினும் இதுதொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கணக்கெடுப்பின் ஊடாக விலங்குகள் தொடர்பான பல்வேறு தரவுகளைப் பெற்றுக்கொள்ளமுடியாத போதிலும் எந்தெந்த விலங்குகள் எந்தப் பிரதேசங்களில் அதிகளவில் காணப்படுகின்றன என்பதை கண்டறியலாம்.
அந்தத் தரவுகளுக்கமைய விலங்குகள் முகாமைத்துவ வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவாக அமையும் - என்றார். (ச-இ)


# பொது அறிவித்தல்



**920503284V** எனும் அடையாள அட்டை இலக்கத்தை கொண்ட **அப்துல் பாசித் அஷ்ரஃப்** என்பவர், ஜனவரி 31, 2024 முதல் American International Campus Pvt Ltd (AIC Campus) மற்றும் IMC Education Pvt Ltd ஆகியவற்றில் ஊழியராக பணி புரிய மாட்டார் என்பதை, இவ்வறிவித்தல் மூலம் பொது மக்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட நபருக்கு **American International Campus Pvt Ltd (AIC Campus)** மற்றும் **IMC Education Pvt Ltd** சார்பாக பேசவோ அல்லது எந்தவித நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ அதிகாரம் இல்லை.

American International Campus Pvt Ltd (AIC Campus) மற்றும் IMC Education Pvt Ltd ஆகிய நிறுவனங்கள், **அப்துல் பாசித் அஷ்ரஃப் என்பவரினால் 2024 ஜனவரி 31ஆம் திகதி முதல் மேற்கொள்ளும் எந்தவொரு நிதி மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கும் பொறுப்பேற்காது.**

AIC CAMPUS | IMC


# சுற்றுலாவிகள் வருகை 11.7 வீதத்தால் உயர்வு

கொழும்பு, மார்ச் 16
2025ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறைமூலம் 768.2 மில்லியன் டொலர் வருவாயை இலங்கை பெற்றுள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயுடன் ஒப்பிடும்போது இது 11.7 சதவீதம் அதிகரிப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆண்டின் முதல் 72 நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 15.3 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு அரசாங்கம் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேசியத்தைப் பாதுகாக்க அரசியலில் களமிறக்கம்

## சனநாயக தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
தேசியத்தை வலியுறுத்தி, மக்களுக்கு அடிப்படைத் தேவையான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கல், வாழ்வாதாரத்தை வலுவாக்கல் உள்ளிட்ட நோக்கங்களை முன்னிறுத்தி எமது செயற்பாடுகள் அமையவுள்ளன என சனநாயகத் தமிழரசுக் கட்சியின் பிரமுகர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவித்துள்ளார்.
யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழரசுக்கட்சி மரணிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. அதை இனி ஒருபோதும் உயிர்ப்பிக்கமுடியாது. தற்கால அரசியல் சூழலில் தமிழ் மக்கள் ஒன்றாகப் பயணிக்கவேண்டியது அவசியமாகும். கடந்த காலத்தில் தமிழ்த் தலைவர்கள் சரியான பாதையை காட்டாமையே இன்றைய பல இன்னல்களுக்கும் காரணமாக இருக்கின்றது - என்றார். (ச-20)



# அம்பலாங்கொடையில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

கொழும்பு, மார்ச் 16
அம்பலாங்கொடை இடம்தொட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

# இலங்கையர்களுக்கு இத்தாலியில் வேலை

கொழும்பு, மார்ச் 16
இலங்கையர்களுக்கு மீண்டும் வேலை விசாக்களை வழங்க இத்தாலிய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத்திட்டக் குழு விவாதத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.
பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு இத்தாலி அரசாங்கம் விசா வழங்குவதை நிறுத்தி வைத்திருந்தது.
இந்தத் தடை கடந்த மார்ச் 4 ஆம் திகதி நீக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

# மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு இந்திய மத்திய அரசின் கையில்!

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 16
இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய மாநில அரசுகள் பேச அழைக்கின்ற பொழுது குறித்த பிரச்சினையைத் தீர்த்து முற்றுப்புள்ளி வைக்கத் தயாராக இருப்பதாக இலங்கையின் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
கச்சதீவு பெருவிழாவில் பங்கேற்றபின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாம் ஆட்சிக்கு வந்து சில மாதகாலங்களே ஆகின்றது. ஆயினும் இதுவரை இந்திய மத்திய அரசோ மாநில அரசோ இது குறித்து எம்முடன் பேச முனையவில்லை.
போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் தொடர்ந்தும் இழுவைமடிகளால் பாதிக்கப்படுகின்றனர்.
எமது வளங்களை நாம் பேணாவிட்டால் ஒட்சிசன் இன்றி வாழவேண்டிய சூழல் வரும். இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு எமது கடற்பரப்பை விட்டுக்கொடுக்க முடியாது. இன்று மயிலிட்டித் துறைமுகம் இந்திய இழுவை மடிப்படகுகள் நிறைந்து தொழில் செய்யமுடியாத சூழலில் காணப்படுகின்றது
எனவே இந்த விடயம் குறித்து தீர்வு காண்பதற்கு இந்திய மத்திய மாநில அரசுகள் பேச அழைத்தால் நாம் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம் -என்றார். (ச- 125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேட்புமனு ஏற்றல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றல் தொடர்பிலான முன்னாயத்தக் கலந்துரையாடல், மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜே. ஏ. ஹாலிங்க ஜெயசிங்க, உதவித் தேர்தல் ஆணையாளர் இ. சசீலன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ரமேஷ்குமார் மற்றும் கணக்காளர் ஏ. நிர்மல் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,9)



வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இதன்போது பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்றன. (ச-25,9)

# அமெரிக்க விருந்தாளி நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 16
எழுத்தாளர் காண்டீபனின் அமெரிக்க விருந்தாளி நூல் அறிமுகவிழா இன்று மாலை 3 மணிக்கு 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் இடம்பெறும்.
தலைமை உரையை சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் நிகழ்த்தவுள்ளார். நூல் வெளியீட்டுரையை, எழுத்தாளரும், கவிஞருமான தீபச்செல்வனும், விமர்சன உரைகளை புலோலியூர் வேல்நந்தன், குலசிங்கம் வசீகரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். முதற்பிரதியினை சண்முகலிங்கம் சஜீலன் பெற்றுக்கொள்வார். அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் நூலாசிரியர் காண்டீபன் ஏற்புரையை வழங்கவுள்ளார். (ம)

# தங்கம் விலையுயர்வு

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் தங்கத்தின் விலை உயர்வடைந்து வருகின்றது. தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம)



## பிரிவுபசார நிகழ்வு

ஊர்காவற்றுறை, மார்ச் 16
ஊர்காவற்றுறை பிரதேசசபையின் செயலாளராக கடந்த ஆறு ஆண்டுகள் கடமையாற்றிய அ. பிரதீபன், வலிகாமம் தெற்குப் பிரதேசசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கான பிரிவுபசார நிகழ்வு சபை உத்தியோகத்தர்களால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ச-25-9)


## மரண அறிவித்தல்

பிறப்பு
22
04
1960



இறப்பு
14
03
2025

### திருமதி ராகினிதேவி வரதராசா

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி தட்டாதெரு சந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ராகினிதேவி வரதராசா அவர்கள் 14.03.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை வள்ளியம்மை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் கனகம்மா தம்பதியின் ஆருயிர் மருமகளும் வரதராசா (ஓய்வு பெற்ற தபால் ஊழியர் புங்குடுதீவு) அவர்களின் பாசமிகு மனைவியும் வசந்தகுமாரி, சந்திராதேவி, குகதாசன், பிறேமினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அமிர்தலிங்கம், ஆனந்தராஜா, தனபாலசிங்கம், சந்திரகுமார், நந்தினி, பாலமனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மனோராணி, பத்மலதா ஆகியோரின் அன்புச் சகலியும் கலைவதனி, கமலினி, கமலலோஜினி, கமலதாசன், கஜவதனன் ஆகியோரின் ஆசை சிறியதாயாரும், சுபராஜ், நிர்மலராஜ், காலஞ்சென்ற யபிந்தன் மற்றும் யதுஷன், தனுஷா, திவ்வியா விபுஷன், சதுர்ஜன், சகிர்ஷன், வினுர்ஷன், வபிர்ஷன், யனோஷன், தரணிகா, பிரவிகா, தஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் நவிஷன், துவாரகன், அஸ்மிதா ஆகியோரின் ஆசை அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (18.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல: 8 அரசடி வீதி
தட்டாதெரு சந்தி
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
077 188 1736

(CS 2750) V-1


சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி

# வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிய மன்னார்

மன்னார், மார்ச் 16
வடக்கு மாகாண மாவட்டச் செயலகங்களுக்கிடையிலான சினேகபூர்வ மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் மன்னார் மாவட்டச் செயலக அணி மூன்றாவது முறையாக வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. நடப்பாண்டுக்கான குறித்த மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டித்தொடர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முதற்போட்டியில் யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலக அணிகள் மோதியதில் மன்னார் மாவட்டச் செயலக அணி வென்றது. மற்றைய பிரிவில் முல்லைத்தீவு - வவுனியா அணிகள் அரையிறுதிப் போட்டியில் மோதியதில் முல்லைத்தீவு மாவட்ட அணி எந்தவித விக்கெட் இழப்பின்றி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. அதற்கமைய இறுதிப்போட்டியில் மன்னார் எதிர் முல்லைத்தீவு அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட எட்டுப் பந்து பரிமாற்றத்தில் மூன்று இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அடுத்து களம் புகுந்த மன்னார் மாவட்ட அணி எட்டாவது பந்துப் பரிமாற்றத்தில் நான்கு இலக்குகனை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டி சம்பியனைத் தனதாக்கியது. (ச-60)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு தேவை**

கந்தர்மடம்,தட்டா தெரு சந்தி, பல்கலைக்கழகம்,பிறவுண் வீதியை அண்மித்த பகுதிகளில் குடும்பம் ஒன்றுக்கு வசதியான தனி வீடு வாடகைக்கு தேவை.

(cs 2743(S)

தொடர்பு - 074 070 2678

**விற்பனைக்கு**

மரவள்ளிக்கிழங்கு வெட்டும் மெசின் விற்பனைக்கு உண்டு

(cs 926) (S)

தொடர்பு - 077 623 7956 யாழ்ப்பாணம்

## மட்டக்களப்பில் விபத்து இளைஞர் ஒருவர் சாவு:

யாழ்ப்பாணம், மார்ச் 16

மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொக்குவில் பகுதியை சேர்ந்த ஜீவரட்சகன் மதுசிகன் (வயது 28) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வீதியை கடக்க முற்பட்ட வேளை ஹைஏஸ் வாகனம் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார். (ம-இ)

## மரண அறிவித்தல்

### தம்பிரத்தினம் மல்லிகாதேவி

மயிலணி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிரத்தினம் மல்லிகாதேவி அவர்கள் நேற்று (15.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிரத்தினம் (முன்னாள் இ.போ.ச ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் சுவேந்திரன் (ரவி பாம் சுன்னாகம்), வாசுகி, வாகினி (கனடா), மயூரன் (பொறியியலாளர் C.E.C.B), கவிதா (மு.சே.உ.இலங்கை போக்குவரத்து சபை) ஆகியோரின் தாயாரும் ஜனனி, வரதராஜா (போபீகன் எலக்ரோனிக் சுன்னாகம்), குணசீலன் (கனடா), இராசகுமார் (மு.சே.உ.மாகாண விவசாயத் திணைக்களம் வ.மா), மெடோனா (வைத்தியர்-யாழ் போதனா மருத்துவமனை ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மயிலணி வடக்கு
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

### கச்சதீவில்...

யுள்ளன. உத்தியோகபூர்வத் தகவல்களின் அடிப்படையில் இலங்கையில் இருந்து இம்முறை 5 ஆயிரத்து 149 பேரும், இந்தியாவில் இருந்து இம்முறை 3 ஆயிரத்து 40 பேரும் கச்சதீவுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

### சங்கிலி...

அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். முறைப்பாட்டுக்கு அமைய விரைந்து செயற்பட்ட பொலிஸார், சந்தேகநபரான பெண்ணைக் கைதுசெய்து அவரை நீதவான் முன்பாக முற்படுத்தினார்கள். இதையடுத்து, அந்தப் பெண்ணை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-ம-125)

**காணி வாடகைக்கு**

செம்மணி வீதியில் சிறு வர்த்தக தேவைக்கு காணி உண்டு.

(தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்) (cs 27491(s)

தொடர்பு - 074 160 2195

### சுழற்சிமுறை....


யல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் பதவியில் இருந்து விலகியுள்ள நிலையில், அந்தப் பதவியை சுழற்சி முறையில் வழங்குவதற்கு கட்சித் தலைமை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்ததாவது:-

கட்சியின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் தனது நாடாளுமன்ற உறுப்புரிமையைத் துறந்துள்ளார். இது மிகப்பெரிய விடயம். கட்சியின் திட்டங்களே அவருக்குப் பிரதானம் என்பதைத்தான் தனது பதவி விலகல் மூலம் அவர் நிரூபித்துள்ளார். அவர் குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும் வரை எவருக்கும் வழங்கப்படமாட்டாது. உள்ளூராட்சித் தேர்தல் நிறைவடைந்த பின்னர், ஒரு வருடத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் அந்தப் பதவி வழங்கப்படும் என்றார். (அ-ம)

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 08 . 1950



மறைவு
14 . 03 . 2025

**அமரர் அம்பலவாணர் சீவரத்தினம் (கிளிபத்தர்)**

கச்சேரி நல்லூர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சீவரத்தினம் (கிளிபத்தர்) நேற்றுமுன்தினம் (14.03.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-நாகம்மா தம்பதியின் புதல்வரும் சம்பந்தர்-செல்லம்மா தம்பதியின் மருமகனும் குகனேஸ்வரியின் அன்புக் கணவரும் சுலோசனா (ஆசிரியர், ஸ்ரீபுத்தூர் சோமஸ்கந்த கல்லூரி), சுமதினி, துர்க்காயினி (Continental Insurance-Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராஜா, திரேஸ்குமார், சாலோமன் (LOLC-Jaffna) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஓவினா, திவானி, திஸ்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் Dr.மஞ்சுளா, சசிதரன், கோபிதரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், இராஜரட்ணம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் (இல.344,கச்சேரி நல்லூர் வீதி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 2745) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 03 . 1970



மறைவு
13 . 03 . 2025

**இராசலிங்கம் யோகலிங்கம்**

யாழ் முத்திரைச்சந்தை நல்லூரைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் யோகலிங்கம் கடந்த 13.03.2025 வியாழக்கிழமை நல்லூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தொழிலதிபர் PRASCO S.P இராசலிங்கம் - சிவமணிதேவி தம்பதியின் அன்பு மகனும், மைதிலியின் அன்புக் கணவரும், வாசவியின் அன்புத் தந்தையும், நேத்திரன் (அவுஸ்ரேலியா), தேவகி, உதயலிங்கம், வாசுகி (கனடா), விஜயலிங்கம் (லண்டன்), நவநீதன் (லண்டன்), புஸ்பலிங்கம் வைதேகி, அருன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

681 பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தை, நல்லூர்.

தகவல் : குடும்பத்தினர்
077 302 2462, 077 761 6471

(CS/57759) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின், செப்ரெம்பர் மாத அமர்வில் நாடு என்ற வகையில் எமக்குப் பெரும் சவால் உள்ளது. இலங்கைக்கு எதிராக இதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.
இந்த விடயத்தில் நாம் உரியமுறையில் தலையிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம். இந்தச் சவாலை எதிர்கொள்ளும் வகையில் எம்மால் தற்போதிருந்தே சில நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக உரிய விடயங்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்றும், நீதி நிலைநாட்டப்படும் என்றும் எம்மால் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. அந்த நிலைப்பாட்டையே நாம் மீளவும் வலியுறுத்தியுள்ளோம். எனவே, ஓர் அரசாங்கம் என்ற வகையில் அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுப்போம்-என்றார். (அ-ம-44)

**காணி விற்பனைக்கு**
கந்தர் மடச்சந்திக்கும் Hindu Ladies College க்கும் இடையில் 1 1/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
• பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி
• சுற்றுமதில் • குழாய்க் கிணறு
தரகர் யாரும் தொடர்புகொள்ளவேண்டாம்.
077 225 5805
(காணி உரிமையாளர்)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526
(CS/57853) 1-1

யாழ் நகர மத்தியில் இயங்கும் பிரபல உணவு,தங்குமிட விடுதிக்கு பின்வரும் வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன
விருப்பம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
வரவேற்பாளர்-Receptionist
காசாளர்-Cashier
சமையல்காரர்-Chef
சமையல் உதவியாளர்-Kitchen helper
அறை துப்புரவு பணியாளர்-Room cleaners
மதுபான விடுதி
பொறுப்பாளர்-Bar attendant / in charge
துப்புரவு பணியாளர்- cleaners
பணியாளர்-Restaurant waiters
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் மற்றும் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 821 0122 , 021 222 1326
(cs2738) (S)

## சாந்திபுரம்...

நகைகள் மன்னார் பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டன.
மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருந்தன. பாதிக்கப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தார். குறித்த திருட்டுத் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயதிலகவின் பணிப்புரைக்கு அமைவாக குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி மகேஷ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தேடுதல் மற்றும் விசாரணைகளின்போது மூன்று சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 28 லட்சம் ரூபா பெறுமதியான மேற்படி நகைகள் மீட்கப்பட்டன.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் சாந்திபுரம் மற்றும் பனங்கட்டுகொட்டுப் பகுதியை சேர்ந்தவர்கள். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (அ-ம-56)

## கச்சதீவில் இம்முறை..

புலனாய்வாளர்கள் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தியுள்ளனர். அத்துடன், தீவு முழுவதும் புலனாய்வுக் கண்காணிப்பு இம்முறை மிகவும் அதிகளவில் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## கச்சதீவுப்...

ஒப்புக்கொடுக்கப்பட்டது.
சிவகங்கை மறை மாவட்ட ஆயர் லூர்து ஆனந்தம் ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது. பல்லாயிரம் மக்கள் திருவிழாத் திருப்பலியில் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினார்கள்.
கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரம், யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார், யாழ் இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி, கடற்படைத் தளபதி காஞ்சனா பானகொட, அட்மிரல் ரவி விஜயகுண்டக், வடமாகாண கடற்படைத் தளபதி துஷார கருணாதுங்க, கடற்படை அதிகாரிகள், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், நெடுந்தீவு பிரதேச செயலர் நிவேதிகா, நெடுந்தீவு பிரதேசசபையின் செயலாளர், வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் உள்ளிட்டோரும் கத்தீவுப் பெருவிழாவில் கலந்துகொண்டனர். (அ-ம-125)

## ஸ்ரீலங்கா...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்விஎழுப்பியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்தகால அரசாங்கங்கள் தங்களை வெளிப்படையாகவே இனவாதிகள் என அடையாளப்படுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தன. ஆனால் தாங்கள் இனவாதிகள் இல்லை எனக் கூறிக்கொண்டு இந்த அரசாங்கம் இனவாதிகள்போல் செயற்படுகின்றது. தமிழ் மக்களுக்குத் தரவேண்டிய அரசியல் தீர்வை தர மறுக்கின்றார்கள். தமிழ் மக்கள் தொடர்பிலும், பொறுப்புக்கூறல் சம்பந்தமாகவும் ஒரு வார்த்தைகூட வெளிவிவகார அமைச்சரால் சொல்லப்படவில்லை.
அநுராதபுரத்தில் நடந்த சம்பவத்தைத் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆனால் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு, கொல்லப்பட்டனர். இசைப்பிரியா கொல்லப்பட்டது ஓர் உதாரணம். இசைப்பிரியா உயிருடன் இருந்தார் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் இருந்தன. அதன்பின்னர் அவர் கொடுமைப்படுத்தப்பட்டு, நிர்வாணப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். அவருக்கு நீதி தேவையில்லையா?' - என்றார். (அ-ம-44)

## பாலியல்...

களில் இராணுவத்தினர் ஈடுபடவில்லை. ஒருசில குற்றச்சாட்டுகளை வைத்து ஒட்டுமொத்த இராணுவத்தையும் மதிப்பிட முடியாது என்று நாமல் ராஜபக்ச தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'எமது நாட்டில் பாதாளக் குழுக்களை ஒடுக்குவதற்குரிய நடவடிக்கையை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு செய்தால் நாம் அரசாங்கத்துக்கு எதிராக நிற்கப் போவதில்லை.
ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்களைப் பாதுகாத்தார் என சாணக்கியன் குறிப்பிட்டார். அவ்வாறு நடக்கவில்லை. ராஜபக்சக்களுக்கு எதிராக அதிக வழக்குகளைத் தொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கதான். அவர்தான் இந்த விடயங்களில் பிரதான சூத்திரதாரியாகச் செயற்பட்டார். எனினும், சர்வதேச ஊடகத்திடம் சென்று நாட்டை அவர் காட்டிக்கொடுக்காதமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றோம்.
இராணுவத்தினருக்கு எதிராக சாணக்கியன் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். போர்க்குற்றங்களில் ஈடுபட்டது மட்டுமல்லாது பாலியல் வன்கொடுமையிலும் ஈடுபட்டனர் எனக் கூறியுள்ளார். ஒருசில சட்டவிரோத சம்பவங்களை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த இராணுவத்தின் மீதும் குற்றஞ்சுமத்தக்கூடாது. சட்டவிரோத சம்பவங்கள் நடந்திருந்தால் அது பற்றி விசாரிக்கலாம். நல்லிணக்கம், மாற்றம் தொடர்பில் பேசுகின்றனர். ஆனால் கடந்தகாலம் தொடர்பில் பேசி வெறுப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்' - என்றார். (அ-ம-44)

## பளையில்...

ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கொடிகாமத்தைச் சேர்ந்த மகேந்திரன் நிசாந்தன் (வயது 23) என்னும் இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். பாரவூர்தியும் மோட்டார்சைக்கிளும் மோதியதில் இந்த இறப்பு சம்பவித்துள்ளது. சடலம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதுடன், பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-113)

## மோடியின்...

அமைச்சர் அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:-
எமது அயல்நாடான இந்தியாவுடன் நெருங்கிய உறவைஏற்படுத்தியுள்ளோம். எமக்கான முதலாவது வெளிநாட்டு இராஜதந்திர அழைப்பை இந்தியாவே விடுத்திருந்தது. அதன்மூலம் பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படுத்தப்பட்டது.
இதைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் முதலாவது வாரத்தில் இலங்கைக்கு வருகின்றார். இலங்கைக்கான அவரின் பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையில் புதிய சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. சம்பூரில் சூரியமின் உற்பத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
ஆன்மீக நிலையங்களுக்குரிய சூரியமின் கட்டமைப்பை வழங்குவதற்குரிய திட்டம் விரிவுபடுத்தப்படும். தோட்ட வீடமைப்புக்குரிய உதவிகள் உள்ளிட்ட விடயங்களையும் நட்புறவு மூலம் பெற்றுள்ளோம். சீனப் பயணத்தின்போதும் பல இராஜதந்திர வெற்றிகள் கிடைக்கப்பெற்றன - என்றார். (அ-ம-44)

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலின் பரிவாரத் திருக்கோவில்களில் ஒன்றான
கற்கட்டு வயிரவர் கோவில்
**மஹா கும்பாபிஷேகம்**
**17.03.2025-திங்கட்கிழமை**
**16.03.2025 ஞாயிறு காலை 10.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி மாலை 06.00 மணிக்கு யாகம் ஆரம்பமாகும்.**
**17.03.2025 திங்கட்கிழமை காலை 09.20 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.**
கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு
**சிவப்பிரம்மஸ்ரீ சொ. இ.விக்னேஸ்வரக்குருக்கள்**
**க. வைத்திலிங்கச் செட்டியார்**
பரம்பரை தர்மகர்த்தாவும்
உரிமையாளரும், முகாமையாளரும்
(CS 2739) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பண வசூலிப்பாளர் தேவை



யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு
**பண வசூலிப்பாளர் தேவை.**
தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 17.03.2025 திங்கட்கிழமை மு.ப 9.00 - பி.ப 02.00 வரை நேரில் சமுகம் தரவும்.

**உதயன்**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## புதுக்கடை திறப்பு விழா

**35 வருட கால பூர்த்தியை முன்னிட்டு கோழிகள்,முட்டைகள் மலிவு விலையில்**

வாடிக்கையாளரின் நலன் கருதி உரும்பிராய் கிழக்கு கோப்பாய் வீதியில் நேற்று 15.03.2025 முதல் எமது 8வது கிளையை தொடங்கியுள்ளோம். இங்கு தற்போது விற்பனைசெய்யப்படுகிறது.

- புறொயிலர் இறைச்சி -980/-
- கல்பேட் இறைச்சி -1100/-
- பேரன்ஸ் இறைச்சி -1200/-
- முட்டை -29/-

**நியூ, சிற்றி கோழிக்கடை**
உரும்பிராய் கிழக்கு கோப்பாய் பிரதான வீதி

## பணிப்பெண் தேவை

மாவிட்டபுரம் பகுதியில் தங்கி நின்று பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.
(cs 2744) (S)
தொடர்புகளுக்கு:- 076 378 2571,077 044 0155

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**(கிணற்றுடன்)** - tube well,
**நல்லூர் கோவில் 1.7 Km,**
**கல்வியங்காடு சந்தி 350 m**
**077 185 4870**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
05 • 02 • 1938



மறைவு
15 • 02 • 2025

**அப்புக்காத்து ஒழுங்கை, சிவபுர வீதி, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், கதிரிப்பாய் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குலவிளக்கு**

### உயர்திரு கோணாநாயகம் குழந்தைவேல்

**(ஓய்வுபெற்ற உபஅதிபர் - வல்வை சிதம்பரக்கல்லூரி, ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம், முன்னாள் பிரதி மாவட்ட ஆணையாளர் இலங்கை சாரணியம், பருத்தித்துறை)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.03.2025) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்றையதினம் நண்பகல் 12.00 மணியளவிலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஞானோதயம்**
**கதிரிப்பாய், அச்சுவேலி.**
(CS/28935) J-1
**குடும்பத்தினர்**
077 923 5011

### தொடர் விபத்தில் ஐவர் பலி

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் 17 வாகனங்கள் தொடர்ச்சியாக மோதி விபத்துக்கு உள்ளானதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை
தொடர்பு: **077 628 0685**

## வீடு வாடகைக்குத்தேவை

யாழ்நகர் மற்றும் நல்லூரை அண்டிய பிரதேசங்களில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத்தேவை.
(cs 57748) N-1
**077 1618 659**

## Room வாடகைக்கு

நல்லூர் மருதடி ஒழுங்கையில் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் கௌரவமான சூழலில் இரண்டு பெண் பிள்ளைகள் வசிக்கக்கூடிய வகையில் தனியான குளியலறை வசதியுடன் கூடிய அறை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: **076 616 8956**
**021 222 1805**

## விற்பனைக்கு

- **காக்கை தீவில் வீதியோரமாக 40 பரப்பு தென்னங் காணி**
- **நல்லூரில் 2 பரப்புக் காணி**

**Divakar Thavavinayagan**
**Contact:- +94 77 221 6683**

## வேலையாட்கள் தேவை

**கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.**

- **முகாமையாளர்**
- **காசாளர்**
- **அலுவலக உதவியாளர்**
- **பேருந்து நடத்துநர்**

(CS/57757) J-1
தொடர்பு:- **076 440 8948**

## அறை வாடகைக்கு

யாழ்நகருக்கு மிக அண்மையில் புதிதாக கட்டப்பட்ட வீட்டில் இணைந்த குளியலறையுடன் கூடிய இருவர் வசிக்கக்கூடிய அறை வாடகைக்குண்டு. பெண்கள் விரும்பத்தக்கது.
(cs 57747) (N-1)
**076 535 2615**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
(CS/57250) J-1
Whats app:-
**+61 421 290 240**

## காணி விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கை, கொழும்புத் துறை வீதி அருகாமையில் 80m தூரமும் சுண்டுக்குளி பாடசாலை 500m தூரத்திலும் புதிதாக பிரிக்கப்பட்ட 1.4 பரப்பு (1ப - 7கு), 2.8 பரப்பும் (2ப - 14 கு) கொண்ட காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

- **UDA வீடு கட்டும் அனுமதி உண்டு.**
- **ஸ்ரீட்லைன், உரிமை, கையளிக்கப்படாமைக் கான நற்சாட்சி சான்றிதழ்கள் உண்டு.**
- **சிறந்த சூழல்**
- **அகலமான 15 அடி - 20 அடி பாதை**
- **மின் இணைப்புக்கான அனுகல் உண்டு.**

**(தரகர் தேவையில்லை)**
(CS/29451) J-1
**076 156 2983, 077 711 5438**

# தேசபந்து தென்னக்கோன் குடும்பத்திடம் வாக்குமூலம்

பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் மனைவி மற்றும் மகனிடம் இருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். 2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின்மீதுதுப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றினால் கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கக் பட்டிருந்தது. ஆனால் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாக இருப்பதால் அவருக்கு எதிராக மாத்தறை நீதவான் நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### அஸ்வெசுமவில் முதியோர் கொடுப்பனவு

கொழும்பு, மார்ச் 16 அஸ்வெசுமத்திட்டம் மூலம் ஏழ்மையான குடும்பங்களில் இதுவரை உதவித்தொகை பெற்று வந்த முதியவர்களுக்கு இம்மாதம் 20 ஆம் திகதி 3 ஆயிரம் ரூபா வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி வங்கிக் கணக்குகளில் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் தபால் நிலையங்கள் மற்றும்துணைத்தபால் நிலையங்கள் மூலம் குறித்த பணத்தைப் பெறமுடியும் என்று தேசிய முதியோர் செயலகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பல்கழன்று பண்டம் பழிகாறும் – இல்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினார்க்கு இல்லையே
ஏம நெறிபடரும் ஆறு

– நாலடியார்

மலை : 34 வ... ஞாயிற்றுக்கிழமை (16.03.2025) சிகரம் :135



# வடக்கில் டெங்கு 95 சதவீதம் கட்டுப்பாட்டில்!



## ஆட்கொல்லி நோயை அடக்கியது எப்படி?

விளக்குகிறார் வடக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சமன் தர்மசிறி பத்திரண

கடந்த காலங்களை விடவும் இந்த ஆண்டு வடக்கில் டெங்குத்தாக்கம் மிகப்பெரியளவில் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. எப்படி அடங்காப்பிடாரியான டெங்குநோயை இவ்வளவு விரைவாகக் கட்டுப்படுத்தினார்கள் என்பதை இந்த நேர்காணலூடாக விபரிக்கின்றார் வடக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சமன் தர்மசிறி பத்திரண.

○ நேர்கண்டவர் கணபதி சர்வானந்தா

**கே: கடந்த 2023 ஆம் ஆண்டு இறுதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகமாக இருந்தது. 2024 இலும் அதே நிலைதான் தொடர்ந்தது. இப்போதும் அந்த நிலைதான் தொடர்கிறதா? தணிந்துள்ளதா?**

ப: டெங்கு நோயின் தாக்கம் முன்னர் இங்கு அதிகமாகக் காணப்பட்டது உண்மைதான். வழமையாகக் கொழும்பு மாவட்டம்தான் அதிக நோயாளிகளைக் கொண்டதாக இருக்கும். ஆனால் 2023, 2024 காலப் பகுதியில் மற்றைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது வயது வித்தியாசமில்லாமல் டெங்குநோயாளிகளாகப் பலர் யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டனர். இங்கு ஏறத்தாழ 500 பேர்வரை நோயாளர்களாக இருந்தனர். ஒன்பது பேர் இறந்திருந்தனர். மருத்துவமனைகள் என்ன செய்வதெனத் தெரியாமல் திணறியமையும் உண்மைதான். அதன் அடிப்படையில் இந்த ஆண்டு பல விடயங்களில் முன்னெச்சரிக்கையாக இருந்தோம். அதனால் இப்போது முன்னரைவிட கட்டுப்பாட்டில் உள்ளது.

**கே: அப்படி டெங்குநோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க என்னவிதமான முறைமைகளைக் கையாண்டீர்கள்?**

ப: இந்த நோயானது காலநிலையோடு சம்பந்தப்பட்டது. ஒரு ஆண்டில் இரு தடவைகள் டெங்கு பரவச் சாத்தியமான காலநிலை இங்கு காணப்படும். ஒன்று ஏப்ரல் தொடக்கம் ஜூலை வரையும் அடுத்து நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலுமாக இரு காலப்பகுதிகள் டெங்குவுக்கான ஏதுநிலைப் பருவங்களாக உள்ளன. இந்தக் காலப்பகுதியிலும் பருவப்பெயர்ச்சிக்கால மழைவரமுன்னரும், நாம் அவதானமாக இருக்க வேண்டியது அவசியம். அந்தக்காலங்களுக்கு முந்திய மாதங்களில் நாம் அது பற்றிய விழிப்புணர்வைச் செய்வதெனத் தீர்மானித்து அதன்படி டெங்கு வரக் கூடிய இடங்களை அடையாளங்காணும் முயற்சியில் இறங்கினோம். இதற்கு ஆளுநரும் பல வழிகளில் உதவியிருக்கிறார். அத்துடன் எமது துறைசார்ந்த அனைவரும் பெரும் பங்காற்றியுள்ளனர். அவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து, பணிகளை ஒப்படைத்தோம். இதன்மூலம் டெங்குநோய்க்கான ஏதுநிலைகளை முதலிலேயே கண்டறிந்து, அழித்ததோடு, மக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தி இப்போது அதனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடியதாக இருக்கின்றது.

**கே: அப்படியானால் சுகாதாரத்துறை மட்டும் இந்த டெங்கு ஒழிப்பைச் செய்யமுடியுமா? மக்களும் இணைந்து செயலாற்ற வேண்டுமா?**

ப: இப்படியான சந்தர்ப்பத்தில் சுகாதாரத்துறைமட்டும் தனித்துநின்று பணியாற்றி நோயைக் கட்டுப்படுத்த முடியாது. பொதுமக்கள் உட்பட சமூக மட்டத்தில் இருக்கின்ற பலரும் மக்கள்சார் தனியார் நிறுவனங்களும் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும். மருந்து மாத்திரைகளோடு மட்டும் நோயைக் கட்டுப்படுத்தலாம் என்றிராது நோய் ஏற்படாமல் இருக்க முற்கூட்டிய நடவடிக்கைகளையும் நாம் துரிதப்படுத்த வேண்டும். தொடர் கண்காணிப்பைச் செய்யவேண்டும். இதுவே நாம் கைக்கொண்ட தொழில் நுட்பமாகும். எதுவும் மக்களின் பரிபூரண ஒத்துழைப்பு இல்லாது சாத்தியமாகாது என்றதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும். இதனால்தான் முன்னைய காலங்களோடு ஒப்பிடும்போது இவ்வாண்டு டெங்குத்தாக்கம் 95 சதவீதமாகக் குறைந்துள்ளது. மற்றைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் இது ஒரு சாதனை என்றுதான் சொல்லலாம்.

**கே: டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக என்னென்ன வகையான நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொண்டீர்கள்?**

ப: ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைகளை இதற்காக ஒதுக்கினோம். என்னோடு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் , தாதியர், மருத்துவப் பணியாளர்கள் என அனைவரும் இணைந்து பணியாற்றினர். தொடர் சந்திப்புகள், அதில் இணைந்த கலந்துரையாடல்கள், தரவு சேகரிப்புகள் என்று பலவற்றோடு டெங்கு பரவக் கூடிய பகுதிகள் என்று சந்தேகிக்கப்படும் இடங்களை அடையாளப்படுத்தி அவற்றைத் தொடர் கண்காணிப்புக்குட்படுத்திக் கொண்டோம். அதுசார்ந்த அனைத்துப் பிரிவுகளுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கிவந்தோம். குறிப்பாக தேவாலயங்களில் பிரார்த்தனைக்குப் பின்னரும், ஆலயங்களிலும், பொது இடங்களிலும் மக்களைச் சந்தித்து அறிவுறுத்தல்களை வழங்கினோம். இதன் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெற்ற காலத்துக்குச் சமாந்தரமாக விழிப்புணர்வையும் உருவாக்கினோம்.

**கே: முன்னைய காலங்களில் டெங்கு ஓர் ஆட்கொல்லி நோயாகவே அறியப்பட்டது. இப்போது நவீன மருத்துவக் கண்டுபிடிப்புகள், தொழிநுட்ப முன்னேற்றம் என்பவற்றால் அதனை விரைவாகக் குணப்படுத்தக் கூடிய ஆற்றல் மருத்துவத்துறையிடம் உண்டா?**

ப: உங்களுக்குத் தெரியும் டெங்கு ஒரு வைரஸ் கிருமி. அதேசமயம் ஆட்கொல்லியாகவும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. அதை நுளம்புகள்தான் பரப்புகின்றன. இந்த நோயால் பாதிக்கப்பட்டவரை ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கும்போது அவர் உயிருடன் திரும்பி வருவார் என்றதை உறுதிப்படுத்தமுடியாது. இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்பு டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நூறு பேரை மருத்துவமனையில் அனுமதித்தால் அதில் இருபத்தைந்து பேர்வரை இறந்ததாகவே பதிவுகள் உள்ளன.

05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டைப்பை நீர்க்கட்டி நோய்

## (Polycystic Ovary Syndrome)

மருத்துவர் க.குருபரன்
MBBS, MD
(பெண்நோயியல் மற்றும் மகப்பேற்றியல் மருத்துவ நிபுணர்,
முதுநிலை விரிவுரையாளர் – மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்)

தற்காலத்தில் பெண்கள் பருவமடைந்தபின் அதிகளவில் கவலையடைய வைக்கும் ஒரு முக்கிய நோயாக முட்டைப்பை நீர்க்கட்டி நோய் (Polycystic Ovary Syndrome PCOS) இன்று உருவாகியுள்ளது.

உலகளாவிய ரீதியில் 100 பெண்களில் 15 பேருக்கு PCOS இருப்பதாகத் தரவுகள் கூறினாலும், ஆசிய நாட்டுப் பெண்களுக்கு இது வருவதற்கான சந்தர்ப்பங்கள் சற்று அதிகமாகும். மேலும் எழுபது வீதமானதமானவர்களில் (70%) PCOS கண்டுபிடிக்கப்படுவதில்லை.

நகரத்து வாழ்க்கைமுறையும், உணவுப்பழக்கத்தில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களுமே இந்த நோய்க்கான அடிப்படையாகக் காணப்படுகின்றன.

கடந்தகாலங்களில் பெண்களின் 20 வயதுக்கு பின்பே, கண்டுபிடிக்கப்பட்ட PCOS தற்சமயம் பதின்ம வயதுகளிலேயே (Adolesecent PCOS) ஏற்படுவது கண்டுபிடிக்கப்படுகிறது. பெண்களின் கருத்தரிக்காமைக்கு மிக முக்கியமான ஒரு காரணமாக இப்பிரச்சினை (PCOS) அமைகிறது. இங்கே கருத்தரிக்கக்கூடிய வளமான முட்டைகள் பெண்களில் உருவாக முடியாமல் உள்ளன.

### முட்டைப்பை நீர்க்கட்டிகள் (PCOS) ஏன் ஏற்படுகின்றன?

- பெண்களின் முட்டைப்பைகளில் சாதாரணமாக மாதாமாதம் ஒரு முட்டை வளர்ச்சி அடைந்து வெளியேறும். அசாதாரணமாக, இவர்களில் (PCOS) மாதாமாதம் கருமுட்டை முதிர்ச்சி அடையாது. முட்டைப்பையில் வெளியேறாது தேங்கியிருக்கும். இவ்வாறு முதிராத முட்டைகள் சிறு சிறு நீர்க்கட்டிகள் போன்று வருடக்கணக்கில் முட்டைப்பைகளில் சேர்ந்திருக்கும்.
- இதனால் முட்டைப்பை சாதாரணமாக இருப்பதை விடச்சற்றுப் பருமனாக இருக்கும். இது ஸ்கான் பரிசோதனையிலேயே கண்டுபிடிக்கப்படும்.
- சாதாரண ஸ்கான் பரிசோதனையில் இவ்வாறான பருமனான முட்டைப்பை (Ovary) கண்டுபிடிக்கப்படலாம்.
- ஆனால் வேறு சில நோய் அறிகுறிகளும் இருந்தால் மட்டுமே அதனை முட்டைப்பை நீர்க்கட்டி நோய் (PCOS) என்று சொல்லலாம்.


### முட்டைப்பை நீர்க்கட்டி நோய் (PCOS) என்றால் என்ன?

பின்வரும் மூன்றில் ஏதாவது இரண்டு அறிகுறிகள் இருப்பின், முட்டைப்பை நீர்க்கட்டி நோய் (PCOS) என்று வகைப்படுத்தப்படலாம்.


- சீரற்ற மாதவிடாய் ஏற்படுதல்
- ஆண்கள் போன்று பெண்களின் முகத்தில் தேவையற்ற ரோம வளர்ச்சி, முகப்பருக்கள், கழுத்தின் பின்புறம் கருப்பு வளையங்கள் தோன்றுதல்
- ஸ்கான் பரிசோதனையில் முதிராத பல முட்டைகளைக் கொண்டுள்ள சூலகங்கள் கண்டுபிடிக்கப்படல்.

**முட்டைப்பை நீர்க்கட்டி நோயின் அறிகுறிகள்**

- சீரற்ற மாத சுகவீனம்
- பெண்களின் உடல் உருவ அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள்
- தலைமயிர் உதிர்தல்
- தோலில் எண்ணெய்த் தன்மை கூடுதல்
- பிள்ளைப் பேறின்மை
- உடல் நிறை அதிகரித்தல்




இவர்களில் ஆண் ஓமோன்களின் (Testesterone) அளவு அதிகரிக்கிறது. இதனாலேயே முகப்பரு (Acne) மற்றும் முகத்தில் தேவையற்ற ரோம வளர்ச்சி (Hirsutism) ஏற்படுகிறது. மேலும் உடலில் கொழுப்பு அதிகரிக்கும்போது அங்கே இன்சுலின் ஓமோனின் செயற்பாடு குறைகிறது. அவர்களில் நீரிழிவு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன. இதன் ஆரம்ப அறிகுறியே கழுத்தின் பின்புறம் கருப்பு வளையங்கள் (Acanthosis) தோன்றுதல் ஆகும்.


கழுத்தின் பின்புறம் கருப்பு வளையங்கள் தோன்றுதல்

இந்நிலை தொடர்ந்தால் பின்வரும் நீண்டகால உடல்நலப் பாதிப்புகள் ஏற்படக்கூடும்

- நித்திரையில் மூச்சுத்திணறல் ஏற்படலாம்.
- கர்ப்பப்பைப் புற்றுநோய் வருவதற்கான சந்தர்ப்பங்கள் கூடலாம்.
- நீரிழிவு நோய் ஏற்படலாம்
- உடலில் கொழுப்பு, கொலஸ்ரோல் அதிகரித்தல்.
- உயர்குருதி அமுக்கம் ஏற்படல்;
- மனச்சோர்வு (Depression) ஏற்படல்

உடற்பருமனிலும் (obesity) உடற்தோற்றத்திலும் ஏற்படும் மாற்றங்கள் (body image), குழந்தைப் பேறின்மை என்பன இதனால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களிடையே மனச்சோர்வையும் சமூகம் தொடர்பான ஒரு களங்க மனநிலையையும் (social stigma) ஏற்படுத்தலாம்.

### ஏன் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் முட்டைப்பை நீர்க்கட்டி (PCOS) ஏற்படுகிறது?

இதற்கு சில காரணங்கள் உள்ளன.

- ஒரு குறிப்பிட்ட வகையான பரம்பரை அலகு (Genetic Predisposition) உள்ளவர்கள்
- உடல் பருமன் அதிகரித்தல்
- மிகவும் மோசமான ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்கள்
- உடற்பயிற்சி இன்றிய வாழ்க்கைமுறை என்பன இருப்பின் இந்த நோய் வெளிப்படுத்தப்படும்.
- பெற்றோருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டிருப்பின் அவர்களுடைய பெண்பிள்ளைகளுக்கு இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மிக அதிகம்

### முட்டைப்பை நீர்க்கட்டி நோயை (PCOS) எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்?

உடல் நிறையைக் கட்டுக்குள் வைத்திருப்பதும், ஒழுங்கான ஆரோக்கியமான உணவுப்பழக்கமும், ஒழுங்கான உடற்பயிற்சியும் நோய் வருவதைத் தடுக்கும் அல்லது தவிர்க்கும் மிக முக்கியமான காரணிகளாக அமைகின்றன.

உணவையே மருந்தாகக் கொள்ளும் நமது பழந்தமிழர் பண்பாடு இந்த நோயை குறைக்கும் வல்லமை கொண்டது. போதியளவு காய்கறிகளை உணவில் தினமும் சேர்க்கவேண்டும். அதிகூடிய கொழுப்பு மற்றும் மாப்பொருள் நிறைந்த உணவுகளைத் தவிர்த்தலும், தினமும் குறைந்தது 30 நிமிடம் நடத்தலும் இந்த நோயைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும்

**முட்டைப்பை நீர்க்கட்டி நோய்சி (PCOS) சிகிச்சைகள்**

- ஆரோக்கியமான உணவு, ஒழுங்கான உடற்பயிற்சி, ஒழுங்கான உணவுப்பழக்கம் இந்த மூன்றுமே மிகச்சிறந்த மருந்துகள்
- உடல் நிறையைக் குறைப்பதால் வேறு பல நன்மைகளும் இவர்களுக்குக் கிடைக்கும்.
- பிள்ளைப்பேறின்மைக்கு அதற்குரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- மாதவிடாயை ஒழுங்குபடுத்த சில மருந்துகள் தரப்படலாம்
- முகப்பரு, முகத்தில் வளரும் மேலதிக ரோமங்களை அகற்ற அவற்றுக்குரிய சிகிச்சைகள் தேவைப்படலாம்.

இதற்கு நிரந்தரத் தீர்வு இல்லை. ஆரோக்கியமான உணவுப்பழக்கமும் ஒழுங்கான உடற்பயிற்சியும் இப்பிரச்சினையை எம்மிடம் அணுகவிடாது. சிறுபராயத்தில் இருந்து பெண்பிள்ளைகளுக்கு நிறையுணவை அளிப்பதன் மூலமும் அதிகளவு காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலமும் நமது பிள்ளைகளை இந்தப் பிரச்சினையிலிருந்து நாம் தற்காத்துக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அண்மையில் அல் ஜெஸீரா தொலைக்காட்சிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணல் தொடர்பான விமர்சனப்பார்வையாக daily ft ஊடகத்தில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கவடிவம் இது)

# அசிங்கப்பட்டது ரணில் மட்டுமல்ல...!

அல்ஜெஸீரா அலைவரிசையின் மெஹ்தி ஹசனினால் நடத்தப்படும் நேர்காணல் தொடரில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க அண்மையில் கலந்துகொண்டார். இதன் போது, இலங்கையில் இடம்பெற்ற போர் அட்டூழியங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளை அவர் எதிர்கொள்ள முடியாமல் திணறினார். தமிழர் அரசியலின் முக்கியமான தருணங்களில் ஒன்றாக இது அமைந்திருந்தது. யுத்தம் நிறைவுற்றதில் இருந்து உலகம் முழுவதும் உள்ள தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களின் நேச அணிகளால் பெறப்பட்ட அடைவுகளின் ஒரு பிரதிபலிப்பாக இது நோக்கப்படுகிறது.

ஒரு முக்கியத்துவம்மிக்க சர்வதேசச் செய்தி ஊடகத்தில் இலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர், இலங்கையின் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடூரங்களுக்கு வகைகூறும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு சந்தர்ப்பமாக இது நோக்கப்படலாம். யுத்தம் நிறைவுற்றவுடன், இலங்கை அரசாங்கம் ஒரு 'மனிதநேய நடவடிக்கையையே' முன்னெடுத்ததாகவும் அதன்போது பொதுமக்களுக்கு எந்தவித சேதங்களும் ஏற்படவில்லை என அறிவித்திருந்தது. இலங்கை அரசாங்கத்தின் இந்தக் கூற்றை நம்பும் நிலையிலேயே சர்வதேசநாடுகளின் தலைவர்களும் இருந்தனர். இதன் வெளிப்பாடாக 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கையில் தமது ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சில சிரேஷ்ட மேற்குலகக் கல்வியியலாளர்கள் இறுதி யுத்தத்தின்போது பொதுமக்களுக்கு பாரதூரமான கொடூரங்கள் இழைக்கப்பட்டன என்ற தமிழ் மக்களின் கூற்றுடன் முரண்படவும் செய்தனர். எனினும், தொடர்ந்துவந்த வருடங்களில், ஐக்கிய நாடுகள் சபையின் மூன்று முக்கியமான அறிக்கைகளில் இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டதுடன் இறுதிப்போரில் இடம்பெற்ற மனிதகுல விரோத நடவடிக்கைகளும் குறித்த அறிக்கைகளில் நிறுவப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய மேற்குலக நாடுகளின் தலைநகரங்களில் தமிழ் மக்கள் முன்னெடுத்த முயற்சிகள் காரணமாக, இறுதிப்போரில் நடந்த கொடுமைகளை வெளிப்படுத்தும் இந்த அறிக்கைகள் எம் கைகளில் தவழ்கின்றன. இந்த அறிக்கைகளின் உருவாக்கம் தற்செயலாக நடந்தது அல்ல, இலங்கை அரசாங்கம் மாத்திரமன்றி இலங்கை மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஓரங்கட்டப்படல் மற்றும் தடைகளைத் தாண்டி தமிழ் மக்கள் இந்த அறிக்கைகளுக்காக போராடியமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த நேரத்தில் இலங்கையில் தமிழ்த் தலைவர்கள் என்று அழைக்கப்பட்ட சிலரும் இந்த சர்வதேச விசாரணைகளுக்கு எதிராகச் செயற்பட்டனர். இந்த அறிக்கைகள் காரணமாகவே, போர்க்குற்றச்சாட்டுகளை புலிகளுக்குச் சார்பானவர்களால் கூறப்படும் பொய்கள் என ரணில் விக்ரமசிங்கவால் புறந்தள்ள முடியாத நிலை தோன்றியது; அவை மதிப்புமிக்க சர்வதேச அமைப்புகளால் நிறுவப்பட்ட கசப்பான யதார்த்தங்களாக ஆகியுள்ளன. இன அழிப்புத் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் தற்போது அல்ஜெஸீரா போன்ற தளங்களில்கூட சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாத உண்மைகளாக மாற்றமடைந்துள்ளன. 2009 ஆம் ஆண்டு நிலைகுலைந்த ஈழத்தமிழர்களின் நிலையுடன் ஒப்பிடும் போது இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். அல்ஜெஸீரா உலக அரங்கில் ஒரு சக்திவாய்ந்த ஊடகமாக வளர்ந்து நிற்கின்றது. மேற்குலக ஊடகங்களால் புறக்கணிக்கப்படும் பல உலக விவகாரங்களில் அது கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த நேர்காணலின்போது, மிகப்பிரபல்யமான மற்றும் நன்கு மதிக்கப்படும் சர்வதேச ஊடகவியலாளர்களில் ஒருவரான மஹ்தி ஹசன் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகளில் காணப்பட்ட சான்றுகளை ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்தபோது , ரணில் நிலைகுலைந்து போனார். அவர் அதிகாரத்தில் இருந்தபோது இவற்றுக்கு ராஜபக்சக்களை பொறுப்புக்கூற வைக்கத் தவறியமை தொடர்பில் தொடர்ச்சியான கேள்விக்கணைகளை மஹ்தி ஹசன் தொடுத்தார். ரணில் பொய்களை அடுக்கியபோது, முதலில் எந்தவொரு மருத்துவமனைமீதும் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்படவில்லை என ரணில் கூறினார். ஆனால் மருத்துவமனைகள் மீது குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கான சான்றுகளை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகளிலிருந்து மஹ்தி ஹசன் முன்வைத்த போது, அந்த மருத்துவமனைகள்மீது திட்டமிட்டு தாக்குதல்கள் நடக்கவில்லை என்றும், அவை தற்செயலாக நடந்தவை என்றும் சமாளிக்க முயன்று தோற்றுப்போனார் ரணில்.

முள்ளிவாய்க்கால் தொடர்பில் யுத்த சூனியப் பிரதேசம் (No fire zone) என்ற ஆவணப்படத்தைத் தயாரித்து வெளியிட்ட சனல்4 தொலைக்காட்சியைச் சேர்ந்த ஹெலம் மார்க்ரேயும் இந்த நேர்காணலை நேரடியாக அவதானித்தவர்களில் ஒருவர். ஒரு கேள்வியைக் கேட்க அவர் அழைக்கப்பட்டார்.

"அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இஸ்ரேல் ஆதரவு கொள்கை வகுப்பாளர்கள் ஹமாஸைத் தோற்கடிக்க இலங்கை அரசாங்கம் பின்பற்றிய தந்திரத்தையே முன்னுதாராணமாகக் கொண்டனர். இலங்கை அரசு செய்ததைப் போல இஸ்ரேலும் முதலில் யுத்த சூனியப் பிரதேசங்களை அறிவித்து அங்கு மக்களை வரவழைத்து அதன் பின்னர் அவ்விடங்களில் சரமாரியான குண்டு வீச்சுகளை நடத்துமாறு தமது படைகளுக்கு வழிகாட்டினர்" என்று தெரிவித்த ஹெலம் மார்க்ரே இதனை உறுதிப்படுத்தும் வகையிலான அறிக்கை ஒன்றையும் காண்பித்தார்.

'இஸ்ரேலைப் போல மனிதகுலத்துக்கு கொடுமைகள் இழைக்க நினைக்கும் ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு இலங்கை ஒரு முன்னுதாரணமாக மாறியிருப்பதைப் பற்றி நீங்கள் கவலையடையவில்லையா?'என்று தன்பங்குக்கு ஹெலம் மார்க்ரேயும் ரணிலை நோக்கி ஒரு வெடிகுண்டுக் கேள்வியை வீசினார். இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லமுடியாமல், ரணில் திக்குமுக்காடினார். அந்தத் தடுமாற்றம் உலக அரங்கில் இலங்கை எவ்வளவுதூரம் அவமானகரமானதாக நோக்கப்படுகின்றது என்பதைக் காட்டியது. ரணிலில்பெரும்பாலான பதில்கள் குழந்தைத்தனமானவையாகவும், பிழையானவையாகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அளிக்கப்பட்டனவாகவும் இருந்தன. பதில் சொல்ல முடியாதவேளைகளில், தன்னைக் கேள்விகளால் மஹ்தின் ஹசன் மடக்கிய போதெல்லாம், நேர்காணலை இடைநிறுத்திவிட்டு வெளியேறப் போவதாகவும் ரணில் பூச்சாண்டி காட்டிப்பார்த்தார். 'பதில் சொல்ல மாட்டேன்' என்று அடம்பிடித்தார். சில நேரங்களில் பதிலே கூறாமல் மௌனம் காத்தார். ஏறக்குறைய ஒரு சர்க்கஸ் கோமாளியாக அந்த நேர்காணலில் ரணில் மாறினார். பல கேள்விகளுக்குப் பதில் சொன்னால் நிலைமையை இன்னும் மோசமாக்கும் என்பது புரிந்ததாலேயே ரணில் அப்படி நடந்து, திசைதிருப்ப முயன்றார்.

'இலங்கை ஒரு ஜனநாயகநாடு இப்போது இங்கே இனப்பிரச்சினை என்பதே இல்லை, தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது 'என ரணிலும், அவரைப் போன்ற கொழும்பு மேட்டுக்குடி அரசியல்வாதிகளும் கடந்த பதினைந்து வருடங்களாகச் சொல்லிவந்த பொய்களை சர்வதேசத்தின் முன்னால் சுக்குநூறாக உடைத்துப்போட்டுள்ளது இந்த நேர்காணல். இந்த நேர்காணலில் உலகின் முன் அசிங்கப்பட்டது ரணில் மட்டுமல்ல, இனப்படுகொலைக் கரங்களை மறைக்க முயலும் இலங்கையின் பௌத்த பேரினவாத அரசும் தான். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கும் வெட்கமில்லை; உலகுக்கும் வெட்கமில்லை; ரணிலுக்கும் வெட்கமில்லை!!

நிலாந்தன்



சிங்கள - பௌத்த அரசுத் தலைவர்கள் யுத்த வெற்றிவாதிகளாக இருந்தாலும் சரி, அல்லது லிபரல் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது சமூக நீதி முகமூடி அல்லது மாற்றத்தின் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, யாருமே தமிழ் மக்களுக்கோ அல்லது இறந்த காலத்துக்கோ பொறுப்புக் கூற மாட்டார்கள் என்பதைத்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் ஐ.நா.வின் 58ஆவது கூட்டத் தொடர் உணர்த்துகின்றது. ஐ.நா. கூட்டத்தொடரில், கடந்த மாதம் 25ஆம் திகதி, தேசிய மக்கள் சக்தியின் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆற்றிய உரையில் ஐ.நா.வின் பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தை நிராகரித்திருந்தார். "சிறீலங்கா பொறுப்புக் கூறலுக்கான நிகழ்ச்சித்திட்டம்"(Sri Lanka accountability project) எனப்படும் அந்தப்பொறிமுறையானது கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு பலவீனமான ஆனால் சர்வதேசப் பொறிமுறை அதுவாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேசப் பொறிமுறையை நிராகரித்து ஒன்பது நாட்களின் பின், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய வாய் மூல அறிக்கை வெளிவந்து நான்கு நாட்களின் பின், ரணில் விக்கிரமசிங்க வின் அல் ஜெஸீரா நேர்காணல் ஒளிபரப்பானது. அந்த நிகழ்ச்சியும் சிங்களத் தலைவர்கள் யாராயிருந்தாலும் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பதைத்தான் உலகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் மேற்படி காணொலி வெளிவந்திருக்கிறது. ஏற்கனவே ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான ஒப்புதல் வாக்குமூலம் அடங்கிய காணொலி உள்ளடங்கலாக 'சனல் 4' காணொலிகள் இவ்வாறு ஐ.நா. கூட்டத் தொடர்கள் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியிலேயே வெளிவந்தன என்பதையும் இங்கு தொகுத்துக் கவனிக்கவேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மறைமுகமாக அழுத்தங்களைப் பிரயோகிக்கும் உள்நோக்கங்கள் இதில் உண்டா என்றும் பார்க்க வேண்டும். கடந்த 15ஆண்டுகளிலும் இவ்வாறு பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களின் விளைவாக தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்தது என்பதையும் தொகுத்துப் பார்க்க வேண்டும்.

இனி அந்தக் காணொலிக்குள் நுழைவோம். முதலில், அந்த நிகழ்ச்சி எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். அது ஒரு நேர்காணல் என்பதைவிடவும் குறுக்கு விசாரணையாகவே பெருமளவுக்கு அமைந்திருந்தது. மஹ்தி ஹசன் நன்கு முன்னாயத்தம் செய்துகொண்டு வந்திருந்தார். விரல் நுனியில் தகவல்களை வைத்திருந்தார். முன்னாயத்தம் செய்யாமல் கேள்வி கேட்கப்போகும் ஊடகவியலாளர்கள் அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். அது புலம்பெயர்ந்த தமிழர்கள் பலமாக உள்ள ஒரு களம். புலம்பெயர்ந்த தமிழர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிந்திருந்தும் ரணில் அநாயாசமாகப் போய் மாட்டிக் கொண்டார். இனி எந்த ஒரு சிங்களத் தலைவரும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு போவதற்கு முன் ஒன்றுக்கு பலதடவை யோசித்து முடிவெடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கும் நிகழ்ச்சி அது. ஒரு விதத்தில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் பலத்தையும் அது காட்டியது.

ரணிலைச் சுற்றிவளைக்கும் கேள்விகள். அவர் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுதே மஹ்தி ஹசன் குறுக்கே பாய்ந்து கேள்விகளைக் கேட்கிறார். சில இடங்களில் ரணில் கூறும் பதில்களைப் பொருட்படுத்தாமலேயே கடந்து போகிறார். சில பதில்களுக்கு மறுத்தான்களை அனாயசமாகத் தூக்கிப்போட்டு விட்டுப் போகிறார். அந்த நிகழ்ச்சி முழுவதிலும் மஹ்தி ஹசன் ஒரு குறுக்கு விசாரணை செய்யும் அதிகாரியின் தோரணையிலேயே பெருமளவுக்கு நடந்து கொண்டார். அந்த நிகழ்ச்சிக்கு கிடைத்த கவர்ச்சியும் அதுதான். தமிழ்த் தரப்பு அதை கொண்டாடுவதற்கு பிரதான காரணங்களில் அதுவும் ஒன்று.

ஆனால் மஹ்தி ஹசன் எவ்வளவுதான் சுற்றிவளைத்தாலும் ரணில் பெருமளவுக்கு உணர்ச்சிவசப்படவில்லை என்பதனை பலரும் கவனிக்கத் தவறுகிறார்கள். ரணில் வெகு 'கூலாக' பதில் கூறுகிறார். அவருடைய சிறிய தொந்தியில் வழுக்கும் கழுத்துப் பட்டியை இடைக்கிடை சரிசெய்து நேராக்கியபடி மிகவும் 'கூலாக' அவர் பதில் கூறுகிறார். ஒரு இடத்தில் மஹ்தி ஹசனைப் பார்த்து "பொறுமையை இழக்காதீர்கள்"என்று சொல்லுகிறார். அதை அவர் மஹ்தி ஹசனுக்குச் சொன்னாரா? அல்லது தனக்குத் தானே சொன்னாரா?

அவர் கூறும் பதில்களில் பல இந்தக்கட்டுரையின் நோக்கு நிலையில், அதாவது தமிழ் நோக்கு நிலையில் மோசமானவை. ஆனால் ரணில் முக்கியமான இடங்களில் மிகவும் கூலாகப் பதில் சொல்லுகிறார். சிரித்துக் கொண்டே தன்னை காந்தியோடு ஒப்பிடுகிறார். சிரித்துக்கொண்டே இலங்கை ஒரு வன்முறை இல்லாத நாடு என்று கூறுகிறார். சிரித்துக்கொண்டே சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது என்று கூறுகிறார். அதே சமயம் அவர் சொன்ன பதில்கள் பலவற்றிலிருந்து உலக சமூகமும் குறிப்பாக ஐ.நா.வும் ஒரு தெளிவான செய்தியைப் பெறக்கூடியதாக இருந்தது. அது என்னவென்றால், சிங்களபௌத்த அரசுத் தலைவர்கள் யாராக இருந்தாலும் பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பது தான்.

2015ஆம் ஆண்டு பொறுப்புக் கூறலுக்கான ஐ.நா.வின் தீர்மானத்துக்கு இணையனுசரணை வழங்கியது ரணில் விக்கிரமசிங்க தான். நிலைமாறு கால நீதிக்கான அந்த தீர்மானத்துக்கு ரணில் மைத்திரி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. அதற்கு முன்னரும் பின்னரும் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்களுக்கு எந்த ஒரு இலங்கை அரசாங்கமும் இணை அனுசரனை வழங்கவில்லை. மட்டுமல்ல, அந்தத் தீர்மானங்களுக்கு எதிராகவே காணப்பட்டன. ஆனால் ஒரே ஒரு தீர்மானம், அதுவும் பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம், அதற்கு இணை அனுசரணை வழங்கிய ஒரே ஒரு தலைவர், ஒரு பகிரங்க நிகழ்வில் வைத்துப் பொறுப்புக்கூறத் தயாரில்லை என்பதனை வெளிப்படுத்துகிறார். அப்படியென்றால் ஐ.நா.வில் இலங்கை அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணைக்குப் பொருள் என்ன?

ஐ.நா.வின் அப்போதைய பொதுச்செயலர் பான் கீமூன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க விசாரணைக் குழுக்களை மஹிந்த உருவாக்கினார். ஆனால் அவை உண்மையைக் கண்டுபிடிக்கவில்லை. அல்லது அவை கண்டுபிடித்த அற்ப உண்மைகளையும் கூட மஹிந்த ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் ரணில் அதைவிட ஒருபடி மேலே சென்று ஒரு தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கினார். அதுவும் இலங்கைத் தீவில் நிலைமாறுகால நீதியை ஸ்தாபிப்பதற்கான அதாவது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம். ஆனால் அவரும் அந்தத் தீர்மானத்துக்கு விசுவாசமாக இருக்கவில்லை. ஐ.நா.வைப் பேய்க் காட்டுவதற்காகத்தான் அவர் அவ்வாறு இணை அனுசரணை வழங்கினார் என்பதைத்தான் அந்த நிகழ்ச்சி வெளிப்படுத்தியது. ஆனால் அதற்காக அவர் வெட்கப்படவில்லை என்பதுதான் இங்குள்ள பயங்கரமாகும். ஜே.வி.பி.யின் இரண்டாவது ஆயுதப் போராட்டத்தின்போது சிங்கள மக்கள் சித்திரவதை செய்யப்பட்ட, கொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் சரி, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இன அழிப்புக் குற்றச்சாட்டுகளுக்கும் சரி, ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கும் சரி, அவர் பொறுப்புக்கூறத் தயாராக இருக்கவில்லை. பொறுப்பற்றதனமாகப் பதில் சொன்னார்.

இலங்கைத்தீவின் வரலாற்றில் ஒரு முன்னாள் அரசதலைவர் அதுபோல எங்கேயும் அவமானப்படுத்தப்பட்டதாக எனக்கு நினைவில்லை. 'உன்னுடைய வயதை விட என்னுடைய அரசியல் வாழ்வின் காலம் அதிகமானது' என்று ரணில் சிரித்துக் கொண்டு சொல்லலாம். ஆனால் அவ்வளவு அனுபவசாலியான அவர் அதுபோல வேறு எங்கேயும் அவமானப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பை அம்பலப்படுத்திய ஆகப் பிந்திய நிகழ்ச்சி அது. சிங்கள பௌத்த அரசுத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள்; கொல்லப்பட்ட சிங்கள மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள்; முஸ்லிம்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்கள்; மட்டுமல்ல சிங்களக் கத்தோலிக்கர்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பது அங்கே தெளிவாகத் தெரிந்தது. எல்லாக் குற்றங்களையும் செய்துவிட்டு அல்லது குற்றவாளிகளைக் காப்பாற்றிக் கொண்டு 'கூலாக' அவர் சொன்ன பதில்கள் யாவும், இனஅழிப்புச் செய்தவர்களையும் தமது அரசியல் வெற்றிகளுக்காக முஸ்லிம் மக்களை பலியிட்டவர்களையும் அவர் பாதுகாக்கிறார் என்று நம்பப் போதுமானவைகளாக இருந்தன. அதாவது குற்றங்களைப் பாதுகாக்கும் குற்ற மயப்பட்ட ஒரு அரசுக் கட்டமைப்புக்கு அவர் தலைவராக இருந்திருக்கிறார் என்பதை அவர் வெளிப்படுத்தினாரா?

மகா சங்கத்துக்கு விசுவாசமாக அவர் கூறிய பதிலில் தன்னை ஒரு சிங்கள பௌத்தனாகப் பிரகடனப்படுத்துகிறார். அங்கே அவருடைய லிபரல் முகமூடி பாரதூரமாகக் கிழிகிறது. ஆனால் அவர் 'கூலாகப்' பதில் கூறுகிறார். இதில் தமிழ் மக்களுக்குப் புதிதாக எதுவும் இல்லை. ஏனென்றால் ரணிலைப் பற்றி ஏற்கனவே தமிழ்மக்கள் மத்தியில் மிகப்பலமான ஒரு படிமம் உண்டு. அன்ரன் பாலசிங்கம் அவரை நரி என்று அழைத்ததை தமிழர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பத்திரும்ப மேற்கோள் காட்டுவது அந்த அடிப்படையில்தான். எனவே ரணில் யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால் ரணிலோடு இணைந்து நல்லாட்சிக் காலகட்டத்தில் அதாவது 2015 இல் இருந்து 18 வரையிலுமான காலப்பகுதியில், நிலைமாறு கால நீதிக்காக உழைத்த தமிழ்ப் பிரதிநிதிகள் இருக்கிறார்களே, அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

அவர்கள் ரணிலை மட்டும் பாதுகாக்கவில்லை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சஜித்தையும் பாதுகாத்தார்கள். சஜித்தும் ரணிலைப்போலதான். கடந்த செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில்தான் ஐ.நா. கூட்டத் தொடரும் நடந்தது. அப்பொழுது சஜித் ஐ.நா. தீர்மானங்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத்தான் கொண்டிருந்தார். ரணில் மட்டுமல்ல சஜித்தும் பொறுப்புக்கூறத் தயார் இல்லை. அதுவும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தமிழ் வாக்குகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில்தான் பொறுப்புக்கூறல் தொடர்பில் சர்வதேசப் பொறிமுறைகளுக்கு எதிராகத் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். இது நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடந்த, பொது வேட்பாளருக்கான கடைசிப் பிரசார கூட்டத்தில், மேடையில் வைத்துப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் தமிழ்மக்களின் வாக்குகளை சுமந்திரன், சஜித்துக்கு வாங்கி கொடுத்தார். தேசத் திரட்சிக்காக, பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட அரியநேந்திரனை சுமந்திரனுக்கு விசுவாசமான மத்தியகுழு கட்சியை விட்டு நீக்கியிருக்கிறது. அதாவது சிங்களத் தலைவர்கள் இறந்த காலத்துக்கு பொறுப்புக்கூறத் தயார் இல்லை. தமிழ் மக்களின் வாக்குகளை அவர்களுக்குச் சாய்த்துக்கொடுக்கும் தமிழ்த் தலைவர்களும் தமிழ்மக்களுக்குப் பொறுப்புக்கூறத் தயாரில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ரூ பாவால் சிக்கல்

மயூ

தமிழக அரசின் வரவு - செலவுத் திட்டம் சட்டப்பேரவையில் தற்போது சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் நிலையில், ஒரு விடயம் இப்போது சர்ச்சையாக உருவெடுத்திருக் கின்றது. இந்த வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னோட்டக் காணொலி ஒன்றைத் தனது சமூகவலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். அந்தக் காணொலியில் இந்தியாவில் இதுவரை பயன்படுத்தப்பட்ட ரூபாவின் குறியீட்டுக்குப் பதிலாக "ரூ" என்ற தமிழ் எழுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளமையே இந்தச் சர்ச்சைக்குக் காரணம்.

இந்திய ரூபாவுக்கென தனிக்குறியீடு 2010ஆம் ஆண்டு பயன்பாட்டுக்கு வந்தது. அதை வடிவமைத்தவர் தமிழரான உதயகுமார் என்பவர்தான் . அவர் வடிவமைத்த ரூபா குறியீடு பயன்பாட்டுக்கு வந்தபிறகு, இதுவரை தமிழகத்தின் வரவு-செலவுத் திட்டத்திலும் அந்தக் குறியீடே பயன்படுத்தப்பட்டு வந்தது. கடந்த ஆண்டுகூட தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் இலச்சினையில் ரூபா குறியீடு இடம்பெற்றிருந்த நிலையில், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட இலச்சினை 'ரூ' என மாற்றப்பட்டிருப்பதே சர்ச்சைகளைத் தோற்றுவித் திருக்கின்றது.

தமிழக அரசாங்கத்துக்கும், பா.ஜ.க. தலைமையிலான இந்திய மத்திய அரசுக்கும் இடையே தற்போது சுமுகமான உறவு இல்லை. மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுசீரமைப்பு உள் ளிட்ட பல்வேறு விடயங்களில் தமிழக அரசு கடும் எதிர்ப்புக் காட்டுவதுடன், மோடி தலைமையிலான மத்திய அரசை கடுமை யாக விமர்சித்தும் வருகின்றது. இந்தப் பின்னணியில் மத்திய அரசின் மீதுள்ள அதிருப்தியாலேயே தமிழக அரசு இந்த "ரூ" விவகாரத்தைக் கையிலெடுத்திருக்கின்றது என்று கூறப்படுகின் றது. தேசிய ரூபா குறியீட்டை ஒரு மாநிலம் நிராகரிப்பது இதுவே முதல்முறை என்பதால் இந்த விவகாரம் பெரும் அவதானிப் பைப் பெற்றிருக்கின்றது.




மாநில வரவு-செலவுத் திட்ட ஆவணங்களில் தேசிய சின்னத்தை நீக்குவது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரி களும் தேசத்தின் இறைமையாண்மையையும், ஒருமைப்பாட் டையும் பாதுகாப்பும் வகையில் எடுக்கும் உறுதிமொழிக்கு எதி ரானது என்று குறிப்பிட்டுள்ள இந்திய மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், இது இந்திய ஒற்றுமையைப் பலவீனப்படுத்துகின் றது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையும் ரூபா குறியீடு மாற்றத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

தமிழக அரசாங்கத்தின் இந்த நகர்வுக்கு பா.ஜ.க. தரப்பில் இருந்து கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. ஆனால் மோடி எதிர்ப்பு மனநிலையில் இருக்கும் தமிழக மக்களை தமிழக ஆளும் கட்சியான தி.மு.கவின் செயற்பாடு நிச்சயம் ஈர்க்கும் என்பதும், அதனால் தி.மு.கவின் அரசியல் தளம் பலமடையும் என்பதும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து. பா.ஜ.கவினர் இந்த விடயத்தில் எந்தளவுக்குக் கொந்தளிக்கின்றனரோ அந்தள வுக்கு தி.மு.க. பயனடையும் வாய்ப்புகளும் இருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டுகின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். ஆனால் மும்மொழிக் கல்விக் கொள்கை எதிர்ப்பால் தமிழக அரசுக்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகள் கேள்விக்குறியாகியுள்ளன என்று கூறப்படும் நிலையில், தமிழக அரசாங்கத்தின் இந்த நகர்வு எத்தகைய நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# வடக்கில்...



அத்தனை கொடுமையானது இந்த டெங்கு நோய். தற்போது காணப்படும் புதிய வைத்திய வடிவங்களாலும், அதனை முகாமைப்படுத்துவதில் இருக் கின்ற புலமையினாலும், நுட்பங்களாலும்தான் இந்த நோயைக் கட்டுப்ப டுத்த முடிகிறது. இருந்தும் இந்நோய் வந்துவிட்டால், இன்னமும் எம்மில் யார் மரணமாவார், யார் பிழைப்பார் என்று சொல்லமுடியாத அளவுக்கே நிலைமை காணப்படுகிறது. உதாரணத்துக்கு என்னை எடுத்துக்கொள் ளுங்கள். நான் மருத்துவத்துறையில் செல்வாக்குள்ள ஒருவன். எனக்குப் பலரைத் தெரியும். எனக்கு இந்நோய் வந்துவிட்டதென வைத்துக் கொள் வோம். நான் டெங்கு வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் நிச்சயம் எனக்கு விசேட கவனிப்பை வழங்குவார்கள். ஆனால் நான் தப் பிப் பிழைப்பேன் என்ற உத்தரவாதத்தை அவர்களால் தரமுடியாது. அவர்கள் என்னை நன்றாகக் கவனிக்கலாம். அதுதான் அவர்களால் செய்யமுடியும். எனவே உங்களிடம் எவ்வளவு சொத்திருந்தாலும், உங்க ளுக்கு எவ்வளவு செல்லவாக்கு இருந்தாலும் உங்களை அவர்கள் காப் பாற்றுவதென்பது கேள்விக்குரிய விடயம். அதுதான் டெங்குநோயில் இருக்கின்ற அபாயம். அதனால்தான் சொல்கிறேன் டெங்குநோய் என்பது வருமுன் கட்டுப்படுத்தப்படவேண்டியதொன்று. வந்தபின் காப்பாற்ற வேண் டும் என்ற நடவடிக்கைகளை எடுப்பதில் அர்த்தமில்லை.

**கே: டெங்குநோயின் வீரியம் எந்தக் காலப்பகுதியில் அதிக அச் சத்தை ஏற்படுத்துவதாக இருந்தது?**

**ப:** டெங்குநோய் பற்றிச் சிந்திக்கும்போது கடந்த 2017 ஆம் ஆண்டுதான் மிகவும் கொடூரமான காலமாக இருந்தது. அதற்காகப் பணியாற்றிய மருத்துவத்துறை சார்ந்த சிலர் கூட மரணமடைந்திருக்கிறார்கள். மருத்துவர்கள், தாதியார்கள், சுகாதாரப் பணியாளர்கள், அவர்களின் உறவினர்கள் எனப் பலரை இந்நோய் காவு கொண்டிருந்தது. அவ்வளவு ஏன்? ஒரு அமைச்சரின் மகள்கூட அக்காலப் பகுதியில் டெங்கினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்திருந்தார். அமைச்ச ருக்கு அவ்வளவு சொல்வாக்கிருந்தும் அவரால் அவரின் மகளைக் காப் பாற்றமுடியவில்லை.

**கே: டெங்குக் கட்டுப்பாட்டில் முன்பிருந்த அமைப்பு முறைகளில் ஏதாவது மாற்றங்களைக் கொண்டு வந்தீர்களா?**

**ப:** ஏற்கனவே இருந்த அமைப்பு முறையைத்தான் நானும் பின் பற்றினேன். அதில் நான் புதிய மாற்றங்கள் என்று ஒன்றை யும் கொண்டுவரவில்லை. ஆனால் கண்காணிப்பு என்ற விடயத்தில் மட்டும் புதிய முறையைக் கையாண்டோம். தொடர்ச்சியான கண்காணிப்பைப் பேணிவந்தோம். இதனை ஓர் அணி சார் நடவடிக்கை (Team Work) என்றுதான் சொல்லலாம்.

**கே: டெங்கைக் கட்டுப்படுத்த மக்கள் என்னென்ன தற்காப்பு நடவ டிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?**


**ப:** டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பது ஒரு சிறந்த வழி. டெங்கு நுளம்புகள் நன்னீரில்தான் முட்டைகளை இடுகின் றன. பிளாஸ்ரிக் கப், சிரட்டைகள் போன்றவற்றில் தேங்கி நிற்கும் மழைநீரில் முட்டை இடுவதை இவை வழக்கமாகக் கொண்டிருக்கின் றன. எனவே கிணறுகளையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். பொதுவாக நுளம்பு முட்டை இடும் இடங்களை இனங் கண்டு அந்த இடங்களைத் துப்புர வாக்கிச் சுத்தமான இடங்களாகப் பேணுவதுதான் இலகுவானமுறை. அத்து டன் தமது சூழலைத் தாமே துப்பரவாக்கிச் சுத்தமாக வைத்திருப்பது சாலச் சிறந்தது. சுகாதாரத் திணைக்களமோ அல்லது உள்ளூராட்சிச் சபைகளோ இதனைச் செய்யவேண்டும் என்றிராது மக்களும் தமது பங்களிப்பை உணர்ந்து ,இது சமூகக் கடமைகளில் ஒன்று என்று எண்ணிச் செயலாற்று வதன் மூலம் டெங்கைக் கட்டுப்படுத்தலாம். அதுவே சிறந்த வழி என்பது எனது எண்ணம். அதற்கு நாமும் எல்லாவகைகளிலும் உதவக் காத்திருக்கி றோம். இது தொடர்பான விடயங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களூ டாகப் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் எப்போதும் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில் தமிழர் பண்பாடும் வாழ்வியலும்

## – ஓர் நோக்கு

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



07

சங்கம் தொடங்கி சமகாலம்வரை பெண்கள் பிரிவின் துயரினைத் தாங்கமுடியாதவர்களாகவே உள்ளனர். ஊண்பித்தையார் என்ற பெண்பாற் புலவர் பெண்ணின் உணர்வுகளினை நன்கு உணர்ந்தவளாக தலைவன் வரவுக்கு வழிமீது விழிவைத்துக் காத்திருப்பதையும் காலம்கடந்தும் தலைவன் வரவில்லையே என்ற தவிப்பினையும் "உள்ளார் கொல்லோ? தோழி! உள்ளியும்" எனத் தொடங்கும் 232 ஆவது குறுந்தொகைப் பாடலில் அழகாகச் சித்தரித்துள்ளார்.

பெண் என்பவள் மென்மையானவள், உணர்வுபூர்வமானவள், மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவள் போன்ற பண்புகளினைக் கொண்டிருப்பவளாக சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. இவைகள் யாவுமே பெண்ணுக்கான அணிகலன்கள் ஆகும். இவை பெண்ணின் வளர்ச்சிக்கும், சிந்தனை ஓட்டத்தின் பரிணாம வளர்ச்சிக்குமான தடைக்கற்கள் அல்ல. இந்தக் குறுந்தொகைப்பாடல் (232) அன்பினால் ஏற்பட்ட தவிப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

மனிதர்கள் பிறமனிதர்கள் மீதும் விலங்குகள் மீதும் வினையத்தினாலும், மனம் சார்பான புரிதல்களினாலும் ஏற்படுத்துகின்ற ஈர்ப்பினை அன்பு என அழைப்பார். உறவுகளின் நிலைக்கு ஏற்ப அன்பின் பரிமாணங்களும் மாறுபடும் தன்மைகொண்டன. ஓர் ஆடவன் தாய்மீது கொள்ளும் அன்புக்கும் அவன் தன் மனைவிமீது கொள்ளும் அன்புக்கும் வேறுபாடு உள்ளது. ஆதிகிரேக்க மெய்யியல் என்ற நூலில் அன்பு, நட்பு, காதல், தெய்வீக அன்பு, குடும்ப உறவு இந்த வேறுபாடுகள் நான்கு பரிமாணங்களில் நோக்கப்பட்டுள்ளன. ஊண்பித்தையாரின் குறுந்தொகைப் பாடலானது காதலன் காதலிமேல் கொண்ட மாசற்ற ஆளிடைக் கவர்ச்சியினைக் காட்டுகின்றது.

காமம் என்ற பதத்துக்கான சமகாலப்பார்வை சற்று முரண்நிலை கொண்டதாயினும்கூட தமிழர்களின் வாழ்வியலில், தமிழர்களின் பார்வையில் இவை உன்னதமானவையாகவே நோக்கப்பட்டன. மேலும் மனித வாழ்வியலின் முழுமைக்கும் காம உணர்வு தேவைப்பாடுடையது ஆகும். சங்ககாலத்தில் மக்களினால் பின்பற்றப்பட்ட மதங்களில் பௌத்த, சமண மதங்களில் காமம் குறித்த தத்துவார்த்த ரீதியான பார்வை எதிர்மறையானதாகவே இருந்தது என்கிற கருத்தும் எண்ணிப்பார்ப்பதற்குரியது. குறுந்தொகைப் பாடலில் பொருள் தேடுதல் பொருட்டு காதலியினைத் தனிமையில் விட்டுவிட்டுச் சென்ற தலைவனை எண்ணிப் புலம்புவதுபோல் அதாவது கார்காலம் ஆகியும் தலைவன் வரைவில்லையே, என் இளமையின் உணர்வினைப் புரிந்துகொள்ளவில்லையே, கூடிக் குலாவி புலன் உணர்வினை அனுபவித்து மகிழ்ந்திட அவன் இல்லையே என்ற ஏக்கம் அவளைக் கதிகலங்க வைப்பதனால், தனது அந்தரங்கமான உணர்வினை அவள் தன்னுடைய தோழிக்குப் பகிர்ந்து தனது மனச்சுமையினை ஆற்றிக்கொள்ள முனைவதன் மூலம் பண்டைய தமிழ்மக்கள் குறிப்பாக மகளிர் எவ்வளவுதூரம் புலன் உணர்வுகளுக்கு (உடலியல் தேவைகளுக்கு) முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதையும் கார்காலத்தில் இரம்மியமான பொழுதில் படர்வதற்குத் துணையின்றி தவிக்கும் முல்லைக்கொடி போல் தலைவனின் நினைவால் அவள் ஏங்கியவளாக இருந்தாள் எனவும் அழகிய மென்மையான சுபாவத்தினைக் கொண்ட இளம் பெண்களின் சிற்றின்ப மிகுதியினையும், அதனை நிவர்த்திசெய்வதற்கான அறம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த தேடலினையும் பெண்பாற் புலவரினால் "இளமை பாரார் வளம்நசை இச்சென்றோர்" என ஆரம்பிக்கும் 126 ஆவது குறுந்தொகைப் பாடலின் வாயிலாக உணர்ந்துகொள்ளமுடிகின்றது.

மேலும் முல்லைத்திணையில் அமைந்த 186 ஆவது குறுந்தொகைப்பாடல் தலைவன் வருகையினை எண்ணி தலைவி உறக்கம் இழந்து உறங்காத விழிகளுடன் காத்திருக்கின்றாள் என்பதனை ஒக்கூர் மாசாத்தியார் என்கின்ற பெண்பாற் புலவர் "எயிறு என முகையும் நாடற்குத் துயில் துறந்தனவால் தோழி! எம் கண்ணே" என மிக அழகாக வர்ணித்துள்ளார். சமகால இயந்திரமயமான இவ் உலகிலும் பொருள் தேடும் முகமாக நாடுகடந்து எத்தனையோ ஆடவர்கள் வெளிநாடுகளில் வேலைசெய்கின்றார்கள். அவர்களுடைய மனையாள்களும் இளமை உணர்வுகளினைத் தியாகம் செய்தவர்களாக உணர்வுகள் இருந்தும் உணர்வுகள் அற்ற ஜடங்களாக வாழ்கின்றார்கள். இந்தக் கையறவுநிலையை அன்றே ஔவையார் 273 ஆவது அகநானூற்றுப் பாடலில் பெண் ஒருத்தியின் காமநோயினை மரத்துக்கு உவமை செய்திருக்கின்றார். அந்தப் பாடலில் பெண் ஒருத்திக்கு எவ்வாறு நுண்ணிய காம உணர்வு ஏற்படுகின்றது என்பதையும் ஆசை மற்றும் காமம் இரண்டும் வெட்கமறியாது என்பதையும் விளக்குகின்றார். சில் என வீசும் வாடைக்காற்று பெண்ணின் உடலை வருடுகின்றபோது காம உணர்வு முளைவிடுகின்றது. பனிக்காலத்தில் குளிர்மிகுதியான நேரத்தில் கணவன் அருகினில் இல்லாமையினால் அவள் துன்புறுகின்றாள் என ஔவையார் சித்தரிக்கின்றார். அதே வேளை இவை எல்லாவற்றினையும் தலைவன் அறிந்திருப்பான்தானே? என்ற கேள்வியின் மூலம் பெண் தனது காம உணர்வுகளினைத் தலைவன் அறிந்திருக்கவேண்டும் என்ற உரிமையுடன் கூடிய எதிர்பார்ப்பும் பெண்கள் மத்தியில் இருக்கின்றது என்பதனைப் பெண்பாற் புலவர் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

மேலும், பெண்கள் அந்தரங்கமான உணர்வுகளினை எல்லாம் தோழியிடம் கூறுவதனால் காமமிகுதியினால் நாணம் இழந்தவளாகக் காணப்படுகின்றனர். பெண்களுக்கு இருக்கவேண்டிய அடிப்படையான அச்சம், மடம், நாணம் என்கின்ற மூன்று குணங்களில் காமம் என்னும் நோயினால் நாணத்தினை இழந்தேன். அதனால் மற்றவர்களின் நகைப்புக்குரியவளாகப் பார்க்கப்பட்டேன் என எண்ணி வருந்துகின்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ந்தினம்

பாகம் 3

இராகவன்

போன கிழமை சிங்கள எக்ஸாமினர் வந்து ட்றையல் காட்டின அநேகம் பேருக்குப் பெயில் போட்டவர் எண்டு முடிச்சிருந்தனான். எனக்கு மோட்டார் சைக்கிள் பழக்கினவர் ஒரு பிள்ளையிட்டயிருந்து மோட்டார் சைக்கிளைப் பறிச்சு என்னட்டத் தந்து ட்றையல் காட்டவிட்டார் எண்டு சொன்னனான் எல்லோ? அந்தப் பிள்ளைதான் ஆகப்பாவம். ஏனெண்டால் அந்தப்பிள்ளையும் பெயில். ம்.... சரி இப்ப விசயத்துக்கு வருவம்.

இப்பிடியெல்லாம் கஷ்டப்பட்டு லைஸென்ஸ் எடுத்தாப்போலயும் நான் என்ர மோட்டார் சைக்கிள வெளியில எடுத்து ஓட வெளிக்கிடேல்ல. இதுக்கிடையில் எங்கட அயல் வீட்டுச்சனம் நானாவது மோட்டார் சைக்கிள் ஓர்றதாவது எண்டு முடிவெடுத்து ஆரும் வந்து விலைக்குக் கேட்டால் உடன மோட்டார் சைக்கிள வித்திடுவன் எண்டு முடிவெடுத்து ஒராளை அனுப்பிச்சினம். அவர் ஆரெண்டால் செங்குந்தர் வீதி முடக்கிலயிருக்கிற சொக்கலிங்கம் அண்ணை. அவரை ஊருக்குள்ள முத்தண்ணை எண்டு கூப்பிடுவினம். கண்ணாடி போட்ட கறுவல் தடியர். அவர் ஒருநாள் காலமை வீட்டை வந்து, "தம்பி உம்மட மோட்டார் சைக்கிளை விலைக்குத் தாருமன்?"எண்டு கேட்டார். அவருக்கு எங்கட சட்டதிட்டங்கள் தெரியுமே? மோட்டார் சைக்கிளை அஞ்சு வரியத்துக்கு ஆருக்கும் விக்கேலாது. ஏனெண்டால் அஞ்சு வரியத்துக்கு அது அரசாங்கத்திண்ட உடைமையாகத்தானிருக்கும். அஞ்சு வரியம் முடிஞ்சாப்போலதான் அது என்ர பெயரில மாத்துப்படும் எண்டதுதான் சட்டம். அதை அவருக்கு விளங்கிறமாதிரிச் சொன்னன். அவர் போகிட்டார். அதுக்குப்பிறகு ஒருநாளும் வரேல்ல. மோட்டார் சைக்கிளும் வீட்டுக்குள்ளதான் நிண்டுது. ஒருக்காள் ஓடிப்பாப்பம் எண்டு வெளிக்கிட்டு வீட்டு முத்தத்தில வச்சு ஸ்ராrட் பண்ணி ஓடவெளிக்கிட்டன். அக்சிலேற்றறைக் கொஞ்சம் உண்டென முறுக்கினன். ஆனால் கொன்றோல் பண்ணத் தெரியாமல் வேகக்கட்டுப்பாட்டையிழந்து நவண்ணாவின்ர தமக்கை வீட்டுக் கேற் தூணோட கொண்டே ஒத்திவிட்டுது. நான் கமல குண்டலமா விழுந்து மீற்றர் கண்ணாடி வெடிச்சுப்போச்சு. அதுக்குப்பிறகு மோட்டார் சைக்கிள கைதொடேல்ல. எந்த வாகனம் ஓடுறதெண்டாலும் வேகக்கட்டுப்பாடுதான் முக்கியம். அதுவும் மோட்டார் சைக்கிளுக்கு வேகக்கட்டுப்பாடு மிக மிக முக்கியம். எனக்கு அதுதான் பெரிய பிரச்சினையாயிருந்திச்சுது. வேகமாப் போறதுக்குத் தெரியும், ஆனால் அதைக் கட்டுப்படுத்துறது எப்பிடியெண்டு தெரியேல்ல, என்னோட நெருக்கமான ஆக்களிட்டயெல்லாம் என்ர பிரச்சினையைச் சொன்னன். அநேகமா எல்லாரும் அது ஒரு பிரச்சினையேயில்லை. கிளச்சைப் பிடிச்சுக் கொண்டு பெஸ்றகியர், செக்கண்ட் கியர், தேர்ட் கியர் எண்டு ஒவ்வொண்டாப் போட்டு ஓடிக் கொண்டு போகிட்டு பிறகு கிளச்சை விட்டுட்டு ஓடிக்கொண்டு போகணும். ஸ்லோ பண்ணவேண்டி வரேக்குள்ள கிளச்சைப் பிடிச்சா எல்லாம் ஓக்கே எண்டு சொல்லிச்சினம். எனக்கது வேர்க்கவுட் ஆகேல்ல. அதால சைக்கிளோட்டத்திலதான் காலம் போச்சுது.

20

என்ர நல்ல காலத்துக்கு அதுவரைக்கும் கரவெட்டி டீ.எஸ் ஒப்பீசில வேலைசெய்த உதயண்ணை மருதங்கேணி டீ.எஸ் ஒப்பீசுக்கு ட்ரான்ஸ்ராகி வந்தார். இப்படியிருக்கேக்குள்ளதான் ஒருநாள் தற்செயலா என்னட்ட மோட்டார் சைக்கிளைப் பற்றிக் கேட்டார். வடமராட்சிக்குள்ளை முதல் முதல் ஹீரோக் கொண்டா மோட்டார் சைக்கிள் எடுத்து ஓடின ஆள் அவர்தான். ஓடின முதல்நாளே நாயோட மோதுப்பட்டு அவர் விழுந்தெழும்பினது ஒரு தனிக்கதை. அதால மோட்டார் சைக்கிள் ஓடுறதில அவருக்கு ஒரு நீண்டகால அனுபவமிருந்தது. அப்ப அவர் என்னட்ட மோட்டார் சைக்கிள் ஓடுறதைப் பற்றி விசாரிச்சாப்போல நான் என்ர பிரச்சினையைச் சொன்னன். அதுக்கு அவர், "இதெல்லாம் ஒரு பிரச்சினையேயில்லை. எப்பவும் பிறேக்கை அமத்தக் கூடியதாகக் காலை வைச்சிரு! அவசரமெண்டால் கிளச்ச இழுத்துக்கொண்டு பிறேக்க அமத்து! அவ்வளவுதான்" எண்டார்.

(தொடரும்)

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை

(சென்றவாரத் தொடர்ச்சி)

## யசிதரன், வளர்மதி கைது






### யசிகரனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

யசிகரன், வளர்மதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் 4ஆம் இலக்க நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. யசிகரன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சாலிய பீரிஸூம் வளர்மதிக்காக நானும் ஆஜராகினோம். யசிகரன், வளர்மதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் யசிகரனால் சுய விருப்பத்தில் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட சிங்கள மொழியில் பதியப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அரச சட்டத்தரணி, தமது தரப்புச் சான்றாக நீதிமன்றில் சமர்ப்பிக்க முற்பட்டார். அப்போது அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தில் பெறப்படவில்லையென நாம் ஆட்சேபித்தொம். அதனையடுத்து குறித்த குற்றஒப்புதல் வாக்குமூலம் யசிகரனால் சுயமாகக் கொடுக்கப்பட்டதா? அல்லது தூண்டுதல், அச்சுறுத்தல், வாக்குறுதி பெறப்பட்டதா? என்ற (Voir Dire) உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

திசநாயகத்தின் மீது சுமத்தப்பட்ட வழக்கு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது யசிகரன், வளர்மதி ஆகியோரின் வழக்கும் நீதிபதி குமுதினி விக்ரமசிங்கவின் முன்னிலையில் ஆரம்பமானது. தொடர்ச்சியாக இந்த வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் யசிகரன், வளர்மதிக்கு எதிரான வழக்கு விசாரணை 2008.11.3 ஆம் திகதி ஆரம்பமாகி 2009.10.13 ஆம் திகதி வரை 14 தவணைகள் நடைபெற்றுவந்தது.

திசநாயகத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை தொடர்ச்சியாக குறுகியகால இடைவெளியில் மிக வேகமாக நடைபெற்றது. ஆனால் யசிகரன், வளர்மதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை குறுகிய கால இடைவெளியின்றி வழமைபோல மேல்நீதிமன்றத்தால் தவணை கொடுக்கப்பட்டு மற்றைய வழக்குகளைப் போல திகதி குறிப்பிடப்பட்டு சாதாரண நடைமுறையிலேயே இழுபட்டது.

### அமெரிக்க அதிபர் ஒபாமாவும் திசநாயகத்தின் விடுதலையும்

அமெரிக்க அதிபர் ஒபாமா திசநாயகத்தின் விடுதலையில் அக்கறைகொண்டுள்ளபடியினால்தான் திசநாயகத்துக்கு எதிரான மேல்நீதிமன்ற விசாரணைகள் மிக வேகமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் மிகவிரைவில் திசநாயகம் விடுதலையாகிவிடுவார் என்றும் வதந்தி பரவியது. இதனால் சிறிது குழப்பமடைந்த யசிகரனும் வளர்மதியும் என்னிடம் "திசநாயகத்தின் வழக்கு விசாரணைகள் மிகக்குறுகிய திகதி வழங்கப்பட்டு, அது முடிவடையும் கட்டத்துக்கு வந்துவிட்டது. திசநாயகம் விடுதலை செய்யப்படுவார் என சிறைச்சாலையிலும் பேசிக்கொள்கின்றார்கள். எங்களுக்கு எதிரான வழக்கையும் குறுகிய திகதியெடுத்து மிக விரைவாக நடத்தி முடித்து மிக விரைவில் விடுதலை வேண்டித் தாருங்கள்" என வேதனையுடன் கூறினர்.



"இந்த வழக்கு சர்வதேசரீதியில் மிக முக்கியம்வாய்ந்த வழக்காகக் காணப்படுவதினால் விரைவாக இந்த வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற ஒரு காரணத்தினால் மட்டும் திசநாயகம் விடுதலை செய்யப்படுவார் என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. வழக்கின் முடிவு திசநாயகத்திற்கு சாதகமாகவோ பாதகமாகவோ அமையலாம்.

திசநாயகத்தை விடுதலை செய்யும் நோக்கம் அரசுக்கு இருக்குமானால் சட்டமா அதிபரினால் வழக்கை மீளப்பெறவும் முடியும். வழக்கு விரைவாக முடிந்து சாதகமாகத் தீர்ப்பு வந்தால் அது உங்களுடைய வழக்கிலும் சாதகமாக அமையும். எந்தச் சூழ்நிலையிலாவது திசநாயகத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை சட்டமா அதிபர் மீளப்பெற்றுக் கொண்டாலும் அதுவும் நடந்துகொண்டிருக்கின்ற உங்கள் வழக்குக்கு சாதகமான முடிவைக் கொண்டுவரும்.

அந்த வழக்கைப் பின்தொடர்ந்து உங்களுக்கு எதிரான வழக்கை நடத்திச்செல்வதனால் மட்டுமே ஒரு சாதகமான முடிவை எதிர்பார்க்கமுடியும். இப்போது தேவை வழக்கை விரைவாக யார் நடத்திக் கொண்டு போகின்றார்கள் என்பதல்ல. சூழ்நிலையைக் களநிலையைக் கருத்திற்கொள்ளாமல் வழக்கை விரைவாக முடித்துத் தண்டனையைப் பெற்று சிறைக்குச் செல்வதா? அல்லது சூழ்நிலையைக் கருத்தில் எடுத்து நிதானமாகச் செயற்பட்டு விடுதலையடைவதா? என்பதுதான் இப்போது அவசியம். எனவே தாமதமானாலும் முடிவு சாதகமாக அமையவேண்டும். அதுதான் நிதானத்தின் வெற்றி" என எனது நீண்ட அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைதியாக விளங்கப்படுத்திய பின்னரே இருவரும் மனதைத் தேற்றிக்கொண்டனர்.

மேல்நீதிமன்ற விசாரணையின்போது யசிகரன் தனது சாட்சியத்தில் தான் தடுப்புக்காவலில் இருந்த காலத்தில் பொலிஸார் தன்னைத் துன்புறுத்தி சித்திரவதை செய்தே குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெற்றனர் என்பதை நீதிபதிக்கு மிகத் தெளிவாக எடுத்துக்கூறியதுடன், தன்னை முதன் முதலாக பொலிஸார் பிரதான நீதவான் முன்னர் ஆஜர்படுத்திய பொழுது கொழும்பு பிரதம நீதவானுக்கு தான் முறையிட்டதையும் மேல் நீதிமன்றில் விபரமாக விபரித்தார்.

இந்நிலையில் திசநாயகத்தின் வழக்கில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக அவரது விருப்பத்தின் பேரிலேயே கொடுக்கப்பட்டதாக நீதிபதி திபாலி விஜயசுந்தர தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்ததைத் தொடர்ந்து, திசநாயகத்துக்கு எதிரான பிரதான வழக்கு மேல்நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. வழக்கின் முடிவில் திசநாயகத்தின் சாட்சி [illegible]

(தொடரும்)

# போரின் கவிதை 3

## வானதி

நீ பிந்திவிட்டால்
தேடி நின்று ஊர் கூடித் தெருவில்
வரும் வரை வாசல் நிற்கும்...
வராமலே போனவளை
வழி பார்க்க வழியில்லாத் தேசமிது..
வறுமைக்குள் வதைந்து
தசை நெருப்பு எரியப் பசித்து
அழும் வயிற்றை வதைத்துத் தள்ளி
விடியும் என்னும்
வார்த்தைக்குள் மடங்கிச் சரிந்த
கன்னிக் குமரிகளே நீவிர் எங்கே...?
அழுகிப்போன இதயத்தை
சிறைக்குப் பின்னே மீட்க
யாரும் வருவாரோ?
சிறையுடைக்கும் மன்னர்கள்
மறுபிறப்புக் கொள்வாரோ?
வாழ்ந்த சமூகமொன்றை
வாழவைக்க வெளிக்கிட்ட
புத்தம் புதுமலர்கள்
மாலைக்குச் சேராமல்
மாண்டும் போகாமல்
தீண்டுவார்
கசக்கிச் சிறை செய்த வன்மம்..
கிளி பிடித்துக் கால் உடைத்து
கூண்டுக்குள் வைத்து....
சொல் பேச்சுக் கேட்கவும்
சொன்னதைச் செய்யவுமோ...
சிறையிலிட்டார்...
வதை செய்தார்?...
வருவீர் என வழிபார்க்கும் தாய்கள்...
காத்திருந்து வயதாகிச் சாகும்.
கூக்குரலில் குரல்மாறி
சுமந்த கரு காணாமல் கசங்கும்......
தொட்டில் ஆட்டிய கைகளை தாமாக
ஆட்டி வதையும்...
இதுவும் வாழ்வென்று வதங்கி வலிக்கும்
பொட்டிட்டு பூவைத்து...ஆராத்தி...
பூப்பூத்ததென்று... ஊர்கூடி விழாவெடுத்து...
மகிழ்ந்த மனங்கள்...மாரடித்துச் சாகும்..
விடியும் வரை..காத்திருந்து...காலையில் கண்ணயரும்...
மனம் வருந்தும் வலிகொடுத்த வாழ்வின் இம்முடிவை
மாற்றிக்கொடுத்த இப்போரின் குழந்தைகளை
யார் தின்றார்? ........ யாருக்குத்தெரியும்.?
விஞ்ஞானம் செய்யும் பெரிய விந்தைகளில்..
போன இடம் காணும் ....தேடல் கருவிகளை
தேடும் தாய்...பாலூட்டிய மார்பின் வலி ...
மரத்துப்பார்த்திருப்பாள்...
காலமே நீ முடிந்தால்...காலனிடம் சொல்லிவை
இந்தக்கரு சுமந்த அவள் முடிவை
நீ முடிக்க அவள்....விடமாட்டாள் ..
இந்தக்கர்ப்பப்பை...அது கற்பின் பை
அதன் சாபம் அவர்களை....
அணு அணுவாய்க் கொல்லும்.

ஆனந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்




## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



**கே.இந்துஜா**
தரம் 9
யா /உரும்பிராய் இந்துக்கல்லூரி




**அ.ஆருசன்**
தரம் 2E
யா /இந்து ஆரம்பப் பாடசாலை



**தீ.நயனிகா**
தரம் 3C
யா /சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை




**அ.அஸ்விதா**
தரம் 7D
யா /இந்து மகளிர் கல்லூரி



**ந.ரக்ஷிகா**
தரம் 5B
யா /சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.




**சி.அபிசன்**
தரம் 7A
யா /இந்துக் கல்லூரி.



**ஆ.அஸ்வின்**
தரம் 6
யா /கொக்குவில் இந்துக் கல்லூரி.



**பி.கிரிஷ்ணி**
தரம் 1C
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.



**ப.யுஹேந்திரா**
தரம் - 8G
யா/ இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org